


சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

21. உயிரும் ஊஞ்சல் ஆடியது!

சக்ரவர்த்தியின் உள்ளத்திலே பெருகிக் கொண்டிருந்த உவகைக் டல் வற்றி வறண்டு போய்விட்டது, முனிவன் பதில் செவியில் விழுந்த தம். முனிவன் முனிவனுகத் தோன்றவில்லை இப்பொழுது; மனிதனுகவே தோன்ற வில்லையாம். ஸாக்ஷாத் யமனுகவே தோன்றுகிறுன்!

அப்படி என்ன நடந்துவிட்டது? "இனி நான் செய்ய வேண்டியதைச் சொல்லியருள வேணும்" என்று வேண்டிக் கொண்டவன் அரசன்தானே? அப்படி என்ன — தலை போகிற காரியத்தையா — சொல்லிவிட்டான் முனிவன்? ஏன்? அது 'உயிர்போகிற காரியம்' என்று கூடச் சொல்லி விடலாமே!

சரிதமும் சுய சரிதமும்

அரசன் "முன் மொழியப் பின் மொழியும் முனிவன் ஆங்கே"— என்று கவிஞன் காட்டியதும், விசுவாமித்திரன் பேச ஆரம்பித்து விடுகிறுன் கம்பீரமாக:

"தருவனத்துள் யான்இயற்றும்
தவவேள்விக்(கு) இடையூருத்,
தவம்செய் வோர்கள்
வெருவரச்சென்(று) அடைகாம
வெகுளியென, நிருதர்இடை
விலக்கா வண்ணம்,
'செருமுகத்துக் காத்தி' என
நின்சிறுவர் நால்வரினும்
கரிய செம்மல்,
ஒருவனைத்தந்- திடுதி" என,
உயிர்இரக்கும் கொடுங்கூற்றின்
உளையச் சொன்னுன்.

கூடிய யாகம். இடையூறு (இடையூறு+ஆ) — இடையூறாக. வெரு
— பயப்பட. அடை — அடைகிற; சேர்ந்து வருகிற. வெகுளி —
கோபம். கிருதர் — அரக்கர். இடை — இடையிலே, செருமுகத்து —
போர்முனையில். காத்தி — காப்பாயாக. செம்மல் — (இங்கே) புத்திர
இரக்கும் — யாசிக்கிற. கூற்றின் — யமனைப்போல. உலைய — (மன
உலையும்படி.]

தருக்களோடு கூடிய வசதியான ஒரு காட்டிலே, தவத்தின் அ
மாக ஒரு வேள்வி செய்யப் போகிறான் விசுவாமித்திரன். இமய ம
வாசியாகிய இந்த முனிவன் 'தரு வனமா'கிய சித்தாச்ரமத்துக்கு வந்திரு
கிறான், — தவ வேள்வி செய்து ஒரு விசேஷ சித்தி பெறுவதற்காக. "அ
எத்தகைய சித்தியோ?" என்பதைப் போகப்போக ஊகஞ் செய்
கொள்ளலாம். ஆனால் அது ஒரு "பெரிய காரியம்" — உலகப் பணியாகி
தேவ காரியம் — என்று மாத்திரம் இப்போதே தெரிந்து கொள்வது நல

பெரிய காரியங்களுக்கு இடையூறு வரத்தானே செய்யும்; பெரி
பெரிய இடையூறுகளும் வரக் கூடுமல்லவா? அப்படியே விசுவாமித்தி
னுடைய தவ வேள்விக்கும் இடையூறாக அரக்கர்கள் வருவார்களாம்.

அந்த அரக்கர்கள் எப்படி வருவார்கள், தெரி



யுமா? தவஞ் செய்கிறவர்கள் பயப்படும்படி ஒரு தொகுதியாகச் சேர்ந்து வருவார்களாம். "தவம் செய்வோர்கள் வெருவச் சென்று அடை காம வெகுளி யென" வருவார்கள்! — என்கிறான் விசுவாமித்திரன்.

என்ன உவமை, பார்த்தீர்களா? காமம் கோபம் முதலியன ராட்சஸ குணங்கள். கருத்திலே புகுந்து கலகஞ்செய்து கெடுக்கும் பாதக அரக்கர் என்று சொல்லலாம், காமம் வெகுளி மயக்கம் என்ற குற்றங்களை. உட்கலகம் செய்யும் இந்த நித்திய சத்துருக்களை உட்பகை என்றும் சொல்லுகிறோம்.

தவ வேள்விக்கு இடையூறாக வந்து கெடுதி செய்யும் புறப்பகைவர்களான ராட்சஸர்களுக்கு உட்பகைவரான ராட்சஸ குணங்களை உவமையாக்குவது பொருத்தம் தானே? இத்தகைய உவமை கம்பனுடைய சிறப்பியல்களில் ஒன்று.

ஆனால் இந்தப் பொருத்தம் மட்டுமா இங்கே? பேசுகிறவன் யார்? பாருங்கள்: விசுவாமித்திரன் அல்லவா? இந்த மகரிஷியின் பெருந் தவங்களைக் காமம் வெகுளி முதலியவை இடையூறாக வந்து கெடுத்தன என்பது புராணப் பிரசித்தம். உதாரணமாக, விசுவாமித்திரன் மேனகையைக் காதலித்துத் தவத்தை இழந்த கதையை அறியாதார் யார்? எனவே இந்த முனிவன் வாக்கிலே இந்த உவமைக்கு விசேஷமான பொருத்தம் இருக்கிறதல்லவா?

இந்த உவமையில் விசுவாமித்திரனுடைய தற்சரிதமும் ஒருவாறு பிரதிபலிக்கிறது என்று கருதலாம். சுய சரித்திரத்தில் தங்கள் குறைகளையும் உள்ளபடியே சொல்லி விடுகிறார்களல்லவா பெரியோர்கள்?

நல்லது. பெரியோனாகிய விசுவாமித்திரன், "அப்பேர்ப்பட்ட ராட்சஸர்கள் இடையே வந்து யாகத்தைக் கெடுத்து விடாதபடி காப்பாய்!" என்று கூறியதும், தன் கைங்கரியப் பிரார்த்தனை நிறைவேறி வருகிறதாகவே நினைக்கக்கூடும் தசரதன். இனிமேல் தான் செய்ய வேண்டிய கடமையையும் முனிவன் அருளுவதாக நம்பவும் கூடும்.

எனவே, "போர் முனையிலே காப்பாய்!" என்று முனிவன் சொன்னதும், அந்த வார்த்தை சந்தோஷத்தை வற்றச் செய்து விடவில்லை. போர் முனையிலே தேவேந்திர பட்டணத்தைக் காப்பாற்றியவன், விசுவாமித்திர யாகத்தைக் காப்பாற்றுவதற்கும் தயார் தான். அந்தத் தோள்களிலும் நெஞ்சிலும் சக்தி இன்றும் குன்றிப் போய் விடவில்லை.

"போர் முனையிலே காப்பாயாக" என்று கூறிப் பின்பு, "என நின்" (என்று உன்னுடைய) என்கிறான் முனிவன். "ஓஹோ, என் படைகளை அனுப்பினாலே போதும் என்றுதான் சொல்லப் போகிறானோ?" என்றுகூட அரசன் நினைத்திருக்கலாம்.

பிறகு "நின் சிறுவர்" என்றதும், "சிறுவர்களா? படை வீரர்கள் இல்லையா?" என்று தசரதன் திகைத்துப் போயிருக்க வேண்டும். உவகைக் கடல் வற்றத் தொடங்கி விட்டது, அந்த உள்ளத்திலே.

முனிவனோ, "நின் சிறுவர் நால்வரினும்" என்று சொல்லிக் கொண்டே போகிறான். உவகைக் கடல் வற்றிக்கொண்டே போகிறது. "நால்வரில் எவனைக் கேட்கப் போகிறாரோ?" என்று தசரதனுடைய

உள்ளம் ஏங்கி வறண்டு போகிறது; கண்கள் இடுங்கிப் போகின்றன. அந்த இடுங்கிய கண்களுக்கு முனிவன் இப்போது முனிவனாகத் தெரியவில்லை!

யமனாக மாறி வருகிறான்!

"சிறுவர் நால்வரினும் கரிய" என்று முனிவன் அழுத்திச் சொன்னதும், கரி பூசியது போல் கருகிப் போகின்றன அந்த முனிவனுடைய முகமும் அகமும் அரசன் கண்களிலே. "நால்வரினும் கரிய" என்று வரையறுத்துப் பேசுகிறாரே! லட்சுமணன் வேண்டாம், சத்ருக்னன் வேண்டாம் — என்று கருதுவது போலிருக்கிறது. அப்படியானாலும் கரிய நிறமுள்ள பரதனை அனுப்பி வைக்கலாமா?" என்று கூட அரசன் வசிஷ்டரோடு ஆலோசனை செய்யக் கூடும். ராமனுக்காக எப்பேர்ப்பட்ட தியாகமும் (சத்தியம் ஒன்று தவிர) செய்யக்கூடியவன்தானே சக்ரவர்த்தி?

முனிவனோ கருமமே கண்ணாகப் பேசுகிறான், காதலே கண்ணாயிருந்த அரசனிடம். உவகைக் கடல் வற்றி வறண்டு "ஸஹாரா" ஆகி விடுகிறது! "கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி" என்று மூத்த பிள்ளையைச் சுட்டிக் குறிப்பிட்டுப் பேச்சை முடிக்கிறான். முடிக்கவே, உயிரை முடிக்கும் கரிய கொடிய யமனாகவே மாறிவிடுகிறான் முனிவன்!

விசுவாமித்திர மகரிஷி கூடத் திடீரென்று, "ராமனைத் தந்து விடு" என்று கேட்டுவிட வில்லை. உசிதமாகவும் சாதுரியமாகவும் பேசிக் காரிய சித்தி பெறத்தான் விரும்பினான். ராமன் சக்ரவர்த்திக்கு உயிர் என்று தெரியாதவனா?

"இந்த உயிரைக் கொண்டு போக வந்த யமனாக விசுவாமித்திரன் இப்போது தோன்றுவதில்தான் என்ன அதிசயம்? எனினும் இந்த யமன் ஒரு அதிசயமான யமன் தான்!

உயிரை எப்படியாவது கொண்டுபோக வேண்டியது தானே யமன் காரியம்? அதற்கு மாறாக, "நான் யாசகத்திற்குத் தான் வந்திருக்கிறேன்!" என்கிறானாம் யமன், நேருக்கு நேராக வந்து நின்று. "நல்லது: யாசிப்பது உன் உயிரைத்தான்! தயவு செய்து தந்துவிடு, அப்பா!" என்கிறானாம். அந்த யமன் சாதாரண யமனாயிருக்க முடியுமா?

அத்தகைய கொடுங் கூற்றாகத் தோன்றுகிறான் ராமனாகிய உயிரை யாசிக்கும் விசுவாமித்திரனும்.

என்ன கொடுமை! என்ன அவஸ்தை!

"வழிப்பறி செய்யும் கொள்ளைக்காரர்கள் துப்பாக்கியும் கையுமாக வந்து பொருளை யாசிப்பது போல்" என்று சொல்வதுண்டு. ஆனால் "ஸாக்ஷாத் யமனே வந்து உயிரை யாசிக்கிறது" அதைக் காட்டிலும் அதிசயமான கொடுமை யல்லவா?

அத்தகைய யமனுடைய அதிசயக் கொடுமையிலும் அதிசயமானது இந்த விசுவாமித்திர - யமனுடைய கொடுமை. இந்த யமன் உயிரை ஒரே அடியாகவும் கேட்டுவிட வில்லையாம். - முதலில் "நின் சிறுவர்" என்று பொதுவாகத் தான் சொன்னான். அது வார்த்தையாகவா வந்து விழுந்தது தசரதன் காதில்? அந்த நெஞ்சிலே வேல் எறிந்தது போலிருந்ததாம்.

"நால்வரினும்" என்றதும், வேல் குழித்த புண்ணிலே புரை ஓடியது! "கரிய" என்றதும், புரை பெரிய துவாரமாயிற்று ('பெரும்புழை'),

கடைசியாகச் "செம்மல்" என்று ராமனைச் சுட்டியதும், புரையோடிய புழையில் கனல் நுழைந்தது !

ஆஹா, என்ன அவஸ்தை! இந்தப் பிராணாவஸ்தையை ஒரு ஜாலக் கண்ணாடியில் பார்ப்பது போலப் பார்த்து விடுகிறோம், இந்தக் கவிதைக் கண்ணாடி வழியாக :

என்னிலா அருந்தவத்தோன்
இயம்பியசொல், மருமத்தின்
எறிவேல் பாய்ந்த
புண்ணில்ஆம் பெரும்புழையில்
கனல்நுழைந்தால் எனச்,செவியில்
புகுத லோடும்,
உள்நிலா வியதுயரம்
பிடித்(து)உந்த ஆருயிர்நின்(று)
ஊச லாடக்,
கண்ணிலான் பெற்றிழந்தான்
எனஉழந்தான் கடுந்துயரம்,
கால வேலான்.

[என் — எண்ணம். மருமம் — மார்பு. ஆம் — ஆகும்; உண்டாகும் புழை — துவாரம். உள் நிலாவிய — உள்ளத்தில் நிலையாகத் தங்கிய உந்த — தள்ள. ஊசல் — ஊஞ்சல். உழந்தான் — வருந்தினான். கால வேலான் — காலன் அல்லது யமன் போன்ற வேலாயுதத்தையுடைய தசரதன்.]

விசுவாமித்திரன் எவ்வளவு சாமர்த்தியமாய்ப் பேசினால்தான் என்ன? எவ்வளவு பெரிய ராஜ ரிஷியாக இருந்தால்தான் என்ன ? "கொடிய அரக்கர்களோடு போர் செய்ய வேண்டி யிருக்கிறது : அந்தப் போர்முனைக்கு உன் ஆருயிரான பிள்ளையை அனுப்பு!" என்று சொன்னானே, அந்தச் சொல் அந்த அருமைத் தந்தைக்கு எவ்வளவு துயரத்தைக் கொடுக்கும்! — என்று எண்ணிப் பார்க்கவேயில்லையாம். "அருந்தவத்தோன்"தானே! கடுமையான தவங்கள் அத்தகைய நல்லுணர்ச்சிகளையும் மழுக்கி விட்டனவோ? — என்பது குறிப்பு.

அந்தச் சொல்லைக் கேட்டதும் சக்ரவர்த்திக்கு உள்ளத்திலே தோன்றிய துயரம் உயிரைப் பிடித்து வெளியே தள்ளியதாம். ஊஞ்சலைப் பிடித்துத் தள்ளத் தள்ள, அது திரும்பத் திரும்ப முன் இருந்த இடத்திற்கு வருகிறதல்லவா? துயரம் தள்ளத் தள்ள, உயிரும் உடலுக்கு மீண்டும் மீண்டும் வந்து சேர்கிறதாம், — "ஒரே அடியாகப் போய் விட்டால் இவ்வளவு அவஸ்தை யில்லையே!" என்று எண்ணும்படி.

இந்த அவஸ்தையில், "நான் மலடனாகவே இருந்திருக்கலாகாதா?" என்ற எண்ணம் கூட வந்து விடுகிறது சக்ரவர்த்திக்கு. வாழ்க்கையெல்லாம் குருடா யிருந்து விடுவதைக் காட்டிலும் மோசமல்லவா, அந்தக் குருடு ஒரு சமயம் கண்களைப் பெற்று மறுபடியும் இழந்து இருளில் ஆழ்ந்து விடுவது?

மகரிஷியின் முகஸ்துதி சக்ரவர்த்தியை ஊஞ்சலில் வைத்து ஆட்டுவதுபோல் இருந்தது: ஆனால் அந்தக் காரியப் பேச்சோ உயிரையே ஊஞ்சலாட்டுகிறது !



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

22. கல்யாண தூதன்

"பிள்ளையையும் அனுப்பாமல் இருக்க வேணும்; மகரிஷிக்கும் சாபம் வராமல் இருக்கவேணுமே! ஐயோ, என்ன தர்ம சங்கடம்!...... ஏதாவது ஒரு சமாதானம் சொல்லித் தீர வேணுமே: என்ன யுக்தி செய்யலாம்?..." என்று ஆலோசித்த அரசனுக்குத் திடீரென்று அந்த யுக்தியும் உதயமாகிவிட்டது. துயரம் கொஞ்சம் தணிந்தது.

தசரதன் பேச்சு

"நான் சொல்லப் போகும் கட்சி நியாயமானது; முனிவரும் ஒப்புக் கொள்ள வேண்டியதுதானே?" என்று எண்ணியவனாய் முதல் முதல், "ராமனுக்கு அவ்வளவு ஆயுதத் தேர்ச்சி இல்லையே!" என்று நிதானமாகவும் அழுத்தமாகவும் சொன்னான். "போர்ப் பயிற்சிதானே பெற்று வருகிறான், வசிஷ்ட குருகுலத்திலே!" என்பது குறிப்பு. அடுத்தபடியாக, "அவன் சிறு பிள்ளை தானே!" என்றான்.

"இப்படிப்பட்ட சிறுவன், போர் வெறிகொண்ட அரக்கர்களை அழித்து வேள்வி காக்க முடியுமா? ஆகவே இந்தப் பிள்ளையாண்டான் எதற்கு?" என்றெல்லாம் வாய்திறந்து சொல்லி விடவில்லை; விசுவாமித்திரனுடைய ஊகத்திற்கு விட்டு விடுகிறான்.

"ஆனால் அந்த யாகக் காவலுக்கு — உன் கட்டளையை நிறைவேற்றித் துஷ்ட அரக்கரோடு போர்புரிந்து வெற்றியும் பெறுவதற்கு — நான் இருக்கிறேனே!" என்றான். முனிவனுக்குத் தெரியாதா? பரமதுஷ்டனான சம்பராசுரனையும் வம்ச நாசம் செய்த அந்தப் பெருந் திறமையை விசுவாமித்திரனே பிரமாதப் படுத்தவில்லையா?

எனவே, உறுதியான குரலில், "இடையூறுகளுக் கெல்லாம் இடை யூறாக நானே வந்து காக்கிறேன்!" என்று ஆத்திரமாய்ச் சொன்னான்; சொல்லிப் புறப்படவும் ஆயத்தமானான்.

தயங்கித் தயங்கித் துயரத்திலே நீந்தி, நிதானமாய்ப் புறப்பட்ட வாக்கு ஒரே உள்ளக் கிளர்ச்சியோடு பிரவாகமாய்ப் பெருகி விடுகிறது:

தொடைஊற்றின் தேன் துளிக்கும்
நறுந்தாரான் ஒருவண்ணம்
துயரம் நீங்கிப்,
"படைஊற்றம் இலன்; சிறியன்
இவன், பெரியோய்! பணிஇதுவேல்,
பனிநீர்க் கங்கை
புடைஊற்றும் சடையானும்,
புரந்தரனும், நான்முகனும்
புகுந்து செய்யும்
இடையூற்றுக்(கு) இடையூறாய்,
யான்காப்பென்: பெருவேள்விக்(கு)
எழுக" என்றான்.

[தொடை — தேன் கூடு. ஊற்றின் — ஊற்றுவது போல். நறுந் தாரான் — வாசனை வீசும் மாலை அணிந்த சக்ரவர்த்தி. ஒரு வண்ணம் — ஒரு விதமாக. படை ஊற்றம் — ஆயுதத் தேர்ச்சி. பணி — கட்டளை. இதுவேல் — இது ஆனால். புடை — பக்கம். ஊற்றும் சடையான் — ஒழுகும் சடையை உடைய சிவ பெருமான். புரந்தரன் — இந்திரன். காப்பென் — காப்பேன்.]

"என்ன பேச்சுப் பிரவாகம், கங்காப் பிரவாகம் போலே!" என்று அதிசயிக்கத் தோன்றுகிறது. "அசுரரானால் என்ன? அரக்கரானால் என்ன? தேவர்களே வந்து இடையூறு செய்தால்தான் என்ன?" என்கிறான். தேவர்களிலும், தேவேந்திரன் பிரமதேவன் சிவபெருமான் ஆகியவர்கள் இடையூறு செய்ய வந்தால்தான் என்ன?" என்று ஓர் ஆவேசமாய்ப் பேசுகிறான். பேசி, ஆலோசனை செய்ய முனிவனுக்கு அவகாசம் தொடாமலே, "பெரு வேள்விக்கு எழுக" — அந்தப் பெரி யாகம் செய்ய எழுந்தருளுங்கள் — என்று அவசரப் படுத்தி அப்படியே அழைத்துக் கொண்டுபோகப் பார்க்கிறான். ஆனால் இந்த யுக்திகளெல்லாம் விசுவாமித்திரனிடமா பலிக்கும்?

விசுவாமித்திர கோபம்

"எழுக" என்றதும் எழுந்துவிடுகிறான் முனிவன்.

தசரதனை அழைத்துக்கொண்டு வேள்வி செய்யப் போவதற்கு அல்ல. "நம்முடைய அபிப்பிராயத்திற்கு மாறுபட்டானே! நம்மையும் ஏமாற்றப் பார்க்கிறானே!" என்று தான் எழுந்திருக்கிறான்.

அந்தக் கோப எழுச்சியைக் கண்டதும் "உலகத்திற்கே முடிவு வந்து விட்டதோ?" என்று தேவர்களும் சந்தேகிக்கிறார்களாம். அந்த உக்கிர மான கோபாக்கினியில் வெயிலே மறைந்து விட்டதுபோலத் தோன்று கிறது.

பூமி சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிறதென்று பூமி சாஸ்திரம் ல்லுகிறதல்லவா? ஆனால் அது நம் கண்ணுக்குத் தெரியவில்லை. விசுவா திர கோபத்தைக் கண்டு ஏற்பட்ட அந்தப் பயத்திலே,—அந்த அதிர்ச்சி — பிரத்தியட்சமாகி விட்டதாம், உலகமானது உருண்டுருண்டு 'ச் சுழலும் அந்தச் சுழற்சி.

புருவம் மேலே ஏறிக் கண்கள் சிவக்கத் திசைகளே இருண்டு போவது லத் தோன்றுகிறதாம். அத்தகைய கோபத்திலே சுழித்து வரும் ச் சிரிப்பைத்தான் என்னென்பது?

பிரம ரிஷியும் ராஜ ரிஷியும்



அப்போது வசிஷ்ட முனிவனும் பக்கத்திலே தான் இருக்கிறான். விசுவாமித்திரனுடைய பழைய எதிரி; பிரம ரிஷி; சிறந்த தத்துவ ஞானி; அகத் தூய்மையோடு சேகரித்த தபோ

தனங்களின் முதலாளி; சாந்தகுண பூஷணன். சாந்தப் படுத்துகிற
விசுவாமித்திரனை.

ராஜ ரிஷியாகிய விசுவாமித்திரன் சிறந்த தவசியானலும் கோ
முதலிய சில குறைகளோடு கூடியவன். ஆனல் வசிஷ்டன் முதலிய பி
ரிஷிகளைக் காட்டிலும் உலக அனுபவம் வாய்ந்தவன்; பரந்த நோக்கம் உ
வன்.

வசிஷ்டன் பேச்சு

"இந்த முனிவனுடைய கூட்டுறவால் நம்முடைய சிஷ்யனை ர
னுக்கு எவ்வளவோ நன்மை உண்டாகப் போகிறது!" என்று ஊகித்
பார்த்தான் வசிஷ்டன். "எனக்காக நீ பொறுத்தருள்வாயாக" என்
அந்தப் பழைய எதிரியை நோக்கிச் சொன்னன், அவனுக்கு உச்சி கு
ளும்படி!

தன்னுடைய குரு குலத்திலே ராமன் கற்ற கல்வி விரிந்து பெ
நிறைவு பெறுமே, விசுவாமித்திரனது பழக்கத்தாலும் உபதேசத்தாலும்
என்று கருதி வசிஷ்டன் சொல்லுகிறன் :

"பெய்யும் மாரியால்
பெருகு வெள்ளம்போய்
மொய்கொள் வேலைவாய்
முடுகும் ஆறுபோல்,
ஐய! நின்மகற்(கு)
அளவில் விஞ்சைவந்(து)
எய்து காலம்இன்(று)
எதிர்ந்த(து)!" என்னவே."

[மாரி — மழை. மொய் — நெருக்கம். வேலைவாய் — கடலிடத்
முடுகும் — மண்டி விரைந்து போகும். ஆறு — விதம்; வகை. அளவ்
விஞ்சை — அளவில்லாத வித்தைகள். எய்து — அடைகிற. என்னவே
என்று சொல்லவே.]

— சக்ரவர்த்தியும் குருவின் வார்த்தையை ஏற்றுக் கொள்கிறன்.
ஏற்கெனவே கல்விக் கடல்தான் ராமன். எனினும் தண்ணீர் நிறை
கிடக்கும் கடலில்தானே மழை பெய்து பெருகும் வெள்ளமும் முடு

போய்ச் சங்கமம் ஆகிறது. எனவே, "இன்று விச்வாமித்திர ரூபத்திலே காலன் வரவில்லை; யோக காலம்தான் வந்திருக்கிறது! அளவில்லாத வித்தைகள் உன் மகனை வந்தடையும் அந்த யோக காலமே வந்து விட்டது!" என்கிறான் வசிஷ்டன்.

இப்படி வெளிப்படையாகச் சொல்லும் வசிஷ்டன், "அரசே! உன் மகனால் விசுவாமித்திர முனிவனுக்குக் காரியம் ஆகவேணும் என்பது வியாஜம்: உண்மையில், அவனாலே உன் மகனுக்கு அளவில்லாத நன்மை உண்டாகும்!" என்று குறிப்பாகவும் உணர்த்துகிறான்.

அவசர அவசரமாய்

பிறகு தசரதன் என்ன செய்கிறான்? — எவ்வளவு பரபரப்பாய்க் காரியங்கள் நடக்கின்றன! பார்த்துக் கொள்ளுங்கள்:

> குருவின் வாசகம்
> கொண்டு கொற்றவன்,
> "திருவின் கேள்வனைக்
> கொணர்மின் சென்று"என
> "வருக என்றனன்,"
> என்ன லோடும்,வந்(து)
> அருகு சார்ந்தனன்
> அறிவின் உம்பரான்.


[கொற்றவன் — சக்ரவர்த்தி. திரு—லட்சுமி. கேள்வன்—நாயகன். என — என்று கட்டளையிட. வருக என்றனன் — (சக்ரவர்த்தி உன்னை) வரவேண்டுமென்று நியமித்தான். சார்ந்தனன் — வந்து சேர்ந்தான். உம்பரான் — மேலானவன்; மேம்பட்டவன்.]

"ராமனை அழைத்து வாருங்கள்" என்று தசரதன் அவசரமாய் உத்தரவு போடுகிறான். பக்கத்திலிருந்த வேலைக்காரன் ஒருவன் அவசரமாக ஓடிப் போய் ராமனிடம் உத்தரவைத் தெரிவிக்கிறான். ராமனும் ஒரே குதியில் வந்து தந்தை அருகில் நிற்கிறான்.

ராமனை அழைத்து வரச் சொல்லும் போது தசரதன் அவனைத் "திருவின் கேள்வன்" (இலட்சுமி நாயகன்) என்று குறிப்பிடுகிறான். இதனால் ராமன் லட்சுமி - நாராயண மூர்த்தியான பகவானுடைய அவதாரம் என்று தசரதன் உணர்ந்து கொண்டதாக ஏற்படாது. "ராஜ்ய லட்சுமிக்கு உரியவன்; மூத்த பிள்ளை" என்று தான் சக்ரவர்த்தி குறிப்பிட்டிருக்க வேண்டும்.

ஆனால் நமது உள்ளமோ அவசர அவசரமாய் மேலும் ஓடுகிறது. "மங்களமான வார்த்தை தசரதன் வாயிலிருந்து விழுகிறது. ஒரு சுப சூசகம். ஆம்; கல்யாணம் வரப் போகிறது! ஆம், ஆம்; இதோ கல்யாணம்... அதற்காகத் தானே விச்வாமித்திரன் வந்திருக்கிறான்? அந்தத் திருமணத் தூதனை அல்லவா வந்து விட்டான்? உலகத்திற்கும் யோககாலம்தான்!" என்றெல்லாம் நமது உள்ளத்திலே உத்ஸாகம் பிறக்கச் செய்கிறது, "திருவின் கேள்வன்" என்ற சொற்றொடர்.

ஆனால் இந்த முனிவன் திருமணத் தூதனாவது எப்படி? வந்த காரியம் வேள்வியா? மணவேள்வியா? நடக்க நடக்கப் பார்ப்போம்.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

23. மன்னன் உயிர் — மாதவன் சாயை

தசரதன் ராமனை மாத்திரம் அழைத்திருந்தான். ராமன் வந்த போதே தம்பியும் வந்து விடுகிறான் பின் தொடர்ந்து. எந்தத் தம்பி? சொல்லவும் வேண்டுமா?

குழந்தைப் பருவம் தொட்டு ஆறு, சோலை, தடாகங்களில் விளையாடும் போதும் ராமனைப் பிரியாமல் இருந்தானே, அந்தத் தம்பி தான்.

சக்ரவர்த்தி அபராதம் செலுத்தினான்!

"லட்சுமணனும் ராமனுக்குத் துணையாகப் போவது நல்லதுதான்: ஒருவனுக்கு இருவர்." என்று கருதும் சக்ரவர்த்தி முதலில் மறுத்ததற்கு அபராதம் செலுத்துவது போல் ராமனோடு லட்சுமணனையும் சேர்த்து ஒப்புவிக்கிறான் விசுவாமித்திர மகரிஷியிடம்.

வந்த நம்பியைத்
தம்பி தன்னொடும்
முந்தை நான்மறை
முனிக்குக் காட்டி," நல்
தந்தைநீ, தனித்
தாயும் நீஇவர்க்(கு);
எந்தை! தந்தனன்:
இயைந்த செய்க "என்றான்.

[நம்பி — ஆணில் சிறந்தவன்; ஒரு செல்வப் பெயர். தம்பி தன்னொடும் — தம்பியோடும். முந்தை நான்மறை — மிகப் பழைய நான்கு வேதங்கள். முந்தை நான் மறை முனி — (இங்கே) விசுவாமித்திர முனிவன். தனி — ஒப்பற்ற. எந்தை — எமது தலைவனே. தந்தனன் — தந்தேன். இயைந்த — இசைந்தவை. செய்க — செய்வாயாக.]

[illegible] பள

தசரதன் கண்களில். அந்தப் பிள்ளையைத் தம்பி லட்சுமணனோடு மகரிஷி
ருக் காட்டுகிறான். காட்டி, "இனி இவர்களுக்குத் தந்தையும் நீ; தாயு
நீயே!" என்று அடைக்கலமாகக் கொடுக்கிறான்.

நல்ல தந்தை என்கிறான் விசுவாமித்திரனை. "நான் பிரியத்தை
செய்ய விரும்பினேன் பிள்ளையாண்டானுக்கு; நீயோ இதத்தை (உண்மை
யான இன்பமாகிய நன்மையை)ச் செய்யப் போகிறாய்: எனவே நீதான்
நல்ல தந்தை!" என்பது குறிப்பு.

இதத்திற்கு மாறுபடாமல் பிரியத்தையும் காட்டவேணும் என்ற குறி
புடன் "ஒப்பற்ற தாயாரும் நீ!" என்கிறான்.

"உனக்கு இசைந்த — ராமனுக்கும் இசைந்த — காரியங்களை
செய்து கொள்வாயாக"
என்று சொல்லி முடிக்கிறா
சக்ரவர்த்தி முனிவனை
நோக்கி.



மகரிஷியின் மைந்தர்கள்

மைந்தர் கிடைத்த மகி
ச்சியில், கோபம் போய் விடு

று விசுவாமித்திரனுக்கு. அவர்களை வாழ்த்தி, "பிள்ளைகளே! நாம் போய் .கத்தை முடிப்போம்" என்று புறப்படுகிறான்.

உடனே ராமனும் ஆயுத பாணியாகிப் புறப்படுகிறான் :

வென்றி வாள்புடை
விசித்து, மெய்ம்மைபோல்
என்றும் தேய்வுறுத்
தூணி யாத்(து), இரு 66
குன்றம் போன்(று) உயர்
தோளில் கொற்றவில்
ஒன்று தாங்கினான்;
உலகம் தாங்கினான்.

[வென்றி — வெற்றி. புடை — பக்கத்திலே; (இங்கே) இடது பக்கத்திலே. விசித்து — கட்டிக் கொண்டு. தேய்வுறு — தேய்தல் இல்லாத; தேய்ந்து போகாத. தூணி — அம்பறாத் தூணி; அம்புகள் வைக்கும் கூடு. யாத்து — கட்டி. கொற்றம் — வெற்றி.]

வெற்றியைத் தரக் கூடிய உடைவாளை இடது பக்கத்திலே கட்டிக் கொண்டான். அம்புக் கூட்டைத் தோளிலே கட்டிக்கொண்டான். எடுக்க எடுக்க அம்புகள் குறையாமல் இருக்கும் அந்த அம்பறாத் தூணிக்கு, என்றும் தேயாத சத்தியத்தை உபமானமாக்குகிறான் கவிஞன். ராம வீரம் சத்திய வீரம் என்பது குறிப்பு.

"வில் ஒன்று தாங்கினான்": எதற்காக? "உலகம் தாங்கினான்" என்கிறான் கவிஞன். உலகம் தாங்கவே வில்லைத் தாங்கினானும் இந்தத் தெய்வ வீரன். சத்தியத்தைக் காப்பாற்றவே குறி தவறாத அம்புகளையும் எடுத்துக் கொண்டானும். பாடப் பாடப் பாட்டின் ஓசை-நயம், அந்த வில்லின் ஓசையையும் செவியில் போடுவது போலத் தோன்றுகிறது.

தம்பியும் ராமனைப் போலவே வில்லும் வாளும் அம்பறாத்தூணியுமாகப் போர்க் கோலம் பூண்டான் என்பதைத் தான் கவிஞன் எவ்வளவு சொற் செட்டோடு,

அன்ன தம்பியும்

[அன்ன — அப்படிப்பட்ட; அப்படி ஆயுத பாணியான.]

என்ற சொற்றொடரிலே காட்டி விடுகிறான்!

அந்தத் தம்பியும் தானுமாக விடை பெற்றுப் போகிறான். சக்ரவர்த்தி எப்படித்தான் சகித்துக் கொள்கிறானோ? அப்போது ராம லட்சுமணர்களின் மனநிலைதான் என்ன? பாருங்கள் அந்தக் காட்சியை :

அன்ன தம்பியும்
தானும், ஐயனும்
மன்னன் இன்னுயிர் 67
வழிக்கொண் டால்எனச்,
சொன்ன மாதவற்
றொடர்ந்த சாயைபோல்,
பொன்னின் மாநகர்ப்
புரிசை நீங்கினான்.

[ஐயன் — தந்தை. வழிக் கொண்டால் என — விடை பெற்றுப் பிரயாணப் பட்டாற் போல. மாதவற்றொடர்ந்த—மகரிஷியைத் தொடர்ந்த. பொன்னின் மாநகர் — பொன் மயமான அயோத்திமா நகரம். புரிசை — கோட்டை மதில்.]

ராமன் விடைபெற்றுக் கொள்ளும்போது, தசரத மன்னனுக்கு எப்படி யிருந்தது? அவனுடைய இனிய உயிரே உடம்பிலிருந்து வெளிப்பட்டு எதிரே நின்று, "நான் போய் வருகிறேன்!" என்று சொல்லிப் பயணப் பட்டாற்போல் இருந்ததாம்.

"மன்னன் இன்னுயிர் வழிக்கொண்டாலெனப்" புறப்பட்டவர்கள் தந்தையின் துன்பத்தைப் பாராமல் உத்ஸாகமாகவே விசுவாமித்திரனுடைய நீங்கா நிழல்போலத் தொடர்ந்தார்களாம். என்ன இசைவான — உயிர் நிலையான — உபமானங்கள்!

அப்படி அவர்கள் அடியிட்டு அயோத்திமா நகரக் கோட்டை மதிலை நோக்கிப் போய்க் கொண்டிருந்ததைத் தசரதன் எவ்வளவு வருத்தத்தோடு கண்ணாலும் கருத்தாலும் தொடர்ந்திருக்க வேண்டும்!

விசுவாமித்திர மகரிஷியின் பாதுகாப்பிலே ராமனைக் கொஞ்ச காலம் அனுப்பி வைப்பதற்குத் தசரதன் இந்தப் பாடு படுகிறான் என்றால், — தசரதனிடம் தன் உயிரே விடை பெறுவது போல் இருக்கிறதென்றால், — கைகேயி கட்டளையால் ராமன் காட்டுக்குப் போகும்போது தசரதன் எப்படித் தான் உயிரை வைத்திருக்க முடியும்? அந்தத் தசரத மரணத்திற்கு விதை இங்கேயே விழுந்து விடுகிறது!

"தம்பியும் தானும்...நீங்கினன்" என்று முடிக்கிறான் கவிஞன். "நீங்கினர்" என்று சொல்லவில்லை. அவ்வளவு ஒருமையாகிவிட்டது, அந்தச் சகோதர ஒற்றுமை!

விசுவாமித்திரனும் ராம லட்சுமணர்களும் அயோத்தியாபுரியின் எல்லையைக் கடந்து சரயு நதியை அடைந்தார்கள். அந்த நதியின் தென்கரையிலுள்ள ஒரு சோலையிலே இராப் பொழுதைக் கழித்துவிட்டு உதய காலத்திலே நதியைக் கடந்து சித்தாச்ரமத்தை நோக்கிப் போகிறார்கள்—என்பது கம்பன் சொல்லும் கதை.

அந்த உதய கிரியைக் கவிஞன்,

> தாழும் மாமழை
> தழுவு நெற்றியால்,
> சூழி யானைபோல்
> தோன்றும் மால்வரை

[மா மழை — பெரிய மேகங்கள். நெற்றி — மேல் இடம். சூழி — முக படாம். மால் — பெரிய.]

என்று வருணிப்பது எவ்வளவு அழகா யிருக்கிறது!

மலையின் நெற்றியிலே பெரிய பெரிய மேகங்கள் தாழ்ந்து தங்குவது, அந்த மலைப் பகுதியை முக படாம் அணிந்த யானை போலத் தோன்றச் செய்கிறதாம். அந்த முகபடாம் எப்பேர்ப்பட்ட 'வெல்வெட்' முகபடாம், பாருங்கள்!

இயற்கை யழகுகளை வழி நெடுக அனுபவித்துக் கொண்டே ராம லட்சுமணர்கள் விசுவாமித்திரனோடு வெளியுலகம் காண்கிறார்கள். பிரம்ம ரிஷியாகிய வசிஷ்டனை ஞானத் தந்தையாகவும் ஞானத் தாயாகவும் கொண்டு அறிவுப் பயிற்சியும் போர்ப் பயிற்சியும் பெற்றவர்கள், விரிந்த வாழ்க்கையாகிய குருகுலத்திலே பிரவேசம் செய்கிறார்கள், ராஜ ரிஷியாகிய விசுவாமித்திரனை "நல் தந்தை"யாகவும் "தனித் தாயா"கவும் கொண்டு.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

24. பாலைவனத்திலே

" இங்கே வெயில்-காலம் என்ற ஒரே காலம்தான்; மழை பனி வசந்தம் முதலான வேறு பருவ காலங்களே இல்லை!" என்று சொல்லும் படியிருந்த ஒரு பிரதேசத்திற்கு வந்து சேர்ந்தார்கள், விசுவாமித்திர னோடு ராம லட்சுமணர்கள் நடுப் பகலிலே, "என்றும் வசந்தமோ?" என் றிருந்த கோசல நாட்டிலிருந்து.

கனலின் ஏகாதிபத்யம்

"நாம் ஒரு பழத்தை உறிஞ்சிச் சக்கையைத் துப்பி விடுவதுபோலே, அந்தச் சூரியன் ஸாரமான ஈரப் பசை முழுவதையும் உறிஞ்சி விட்டு உமிழ்ந்து போட்ட சக்கைதானோ இந்தப் பூமி?" என்று கூட எண்ணத் தோன்றுகிறதாம். இந்தப் பிரதேசத்தைக் காணும் கண்களும் வெந்து போகும்; நினைக்கும் நெஞ்சும் வெந்து போகுமே! — என்றெல்லாம் பய முறுத்துகிறான் கவிஞன். ஏன்? இந்தப் பயங்கரமான பாலைவனத்தை வர்ணிக்க நாக்கும் நடுங்குகிறதாம், "வெந்து போவோமோ?" என்று.

இலைகள் இல்லாமல் உலர்ந்துபோன சில மூங்கில்களையும், பேய் உடல் பிளந்து நிற்பது போல நின்ற வைரம் பாய்ந்த கள்ளி மரங்களையும் தவிர, நிழலுக்கு வேறொரு மரமும் காணப்படவில்லை. அந்தக் கள்ளி மரங்களைத் தான் எவ்வளவு பயங்கரமாக,

பேய்பிளந்(து) ஒக்கநின்(று)
உலர்பெருங் கள்ளியின்
தாய்

[பிளந்து ஒக்க — பிளந்தாற் போல.]
என்று வர்ணிக்கிறான் கவிஞன்.

சக்ரவர்த்தியின் மகா ராஜ்யம்தான் இது!" என்றும் வர்ணித்துப் பார்கிறான்.

ஏகவெங் கனல்அர(சு)
இருந்த காட்டிவில்
[வெங்கனல் — கொடிய நெருப்பு.]

என்ற இந்த ஒரு செய்யுளடியே போதும், இந்தப் பாலைவனத்தின் கொமையை நாம் மறக்க முடியாதபடி காட்டுவதற்கு!

கொதிக்கும் வீர நெஞ்சுபோல்

இப்படி யெல்லாம் இயற்கை வர்ணனை செய்தும் திருப்தி யடையமல் கவிஞன் வேறு விதமாகவும் இந்தக் கொடிய தாபத்தை அளந்து காட்டப் பார்க்கிறான்.

ஒரு கொடிய போர்க்களம்: பழைய காலத்துப் போர்களம்தான். அம்பு, வேல் முதலிய ஆயுதங்கள் சோனமாரியாகப் பொழிகின்றன. எனினும் வீரன் அந்தக் கொ



மையை லட்சியம் செய்யவில்லை. வெற்றிபோல் மரணத்தையும் வரவேற்கத் தயார். ஆனால்—கொடுமையினும் கொடுமை — நேருக்கு நேர் நின்று அந்தக் களத்திலே போர் செய்யும் திறமையில்லாத வஞ்சகர்களின் தீவினையினால் தோல்வி வந்து விடுகிறதாம் அவனுக்கு. "போரிலே சாவுக்கும் வழியில்லை : ஆஹா, இனி என்ன வாழ்வு? மானம் இழந்த வாழ்வு!" என்று கொதிக்கிறது வீர உள்ளம்.

மானம் என்ற சிறந்த அந்த ரத்தினம் ஒன்றையே பொருள்களுக்கெல்லாம் மேலான பொருளாக, ரத்தினங்களில் எல்லாம் சிறந்த ரத்தினமாக, கோஹினூர் முதலான முடி மணிகளுக்கும் மேலாக, நெஞ்சிலே போற்றிப் பொதிந்து பாதுகாத்து வந்த வீர உள்ளம், அந்த மணியையும் இழந்து வாழ ஒருப்படுமோ? அந்த வீர நெஞ்சின் ஆறாத கனலைப்போல் இருக்கிறதாம் வெப்பம் குன்றாத இந்தப் பாலை வனமும்.

இப்போது பாருங்கள் அந்தப் போர்க்களக் காட்சியையும், ஹிருதய தாபத்தையும் :

விஞ்சுவான் மழையின்மேல்
    அம்பும்வே லும்பட்ச்,
செஞ்செவே செருமுகத்(து),
    அமர்செயும் திறன்இலா
வஞ்சர்தீ வினையினால்
    மானமா மணிஇழந்(து)
அஞ்சினர் நெஞ்சுபோல்,
    என்றும்ஆ றுதரோ!

[விஞ்சு — மிகுந்து. மழையின் — மழை போல. செஞ்செவே—மிகவும் செவ்வையாக. செருமுகம் — போர்க் களம். அமர் — போர். அஞ்சினர் — (இங்கே) தோற்றவர்கள்.]

வஞ்சிக்கப்பட்ட அந்த வீர நெஞ்சின் கொடிய தாபம்போல் கொதித்துக் கொண்டிருந்த இந்தப் பாலைவனத்தின் பசையற்ற தன்மைக்கும் அப்படியே பொருத்தமான உபமானம் ஒன்று காட்ட விரும்புகிறான் கவிஞன். இப்போது வீர மக்களையும் விட்டு அதிவீரர்களான ஞான வீரர்களைக் குறித்துப் பேசுகிறான்.



ஞானியும் வேசியும் போலே!

ஞான வீரர்களின் ஹிருதயம் எப்படிப் பசை அற்றதோ, அப்படி பசை அற்றது இந்தப் பாலைவனமும்—என்கிறான். என்ன அதிசய ஞானிகளின் ஹிருதயமும் பாலைவனம்போல் பசை அற்றதா? கொஞ் பொறுத்துப் பாருங்கள் :

தாவரும் இருவினை
செற்றுத், தள்ளரு
மூவகைப் பகைஅரண்
கடந்து, முத்தியில்
போவது புரிபவர்
மனமும், பொன்விலைப்
பாவையர் மனமும்போல்,
பசையும் அற்றதே.

[தா அரும் — அறவே அழிவதற்கு அருமையான. செற்று — அழித்து. தள்ளரு — தள்ளுவதற்கு அல்லது நீக்குவதற்கு அருமையா புரிபவர் — விரும்புகிறவர். பொன்விலைப் பாவையர் — பொன்னை வி யாகக் கொண்டு அழகை விற்கும் வேசை மாதர்.]

ஞான வீரர்களும் வாழ்க்கையாகிய போர்க்களத்திலே முன்னேறி சென்றுதான் மோட்ச மார்க்கத்தை அடைகிறார்களாம். முதல் முத அழிப்பதற்கு அருமையான இருவகைச் சேனைகளையும் அழித்து விடுகிற களாம். பகைவனுடைய அந்தச் சேனைகள் அழிந்ததும் அவனுடைய அர களாகிய — தள்ள முடியாத — மூன்று கோட்டை மதில்களையும் கடந் போகிறார்களாம். அப்பால் போராட்டம் நின்று போகிறது; காரியசித் சுலபமாகி விடுகிறதாம்.

இத்தகைய ஞான வீரர்கள் எதிர்த்து வெல்லும் படைகள் எவை இவர்கள் கடந்து செல்ல வேண்டிய மூன்று கோட்டை மதில்கள்தா எவை?

நல்வினைகள், தீவினைகள் என்ற இருவகை வினைகளும், கோட்ை க்கு வெளியே வந்து இந்த ஞான வீரரோடு சண்டை செய்யும் படைகள்- என்கிறான் கவிஞன். தீவினைகளைப் போல் நல்வினைகளும் மோட்சத்தை அடைய விரும்பும் முமுட்சுக்களால் சத்துருக்களாகவே மதிக்கப் படுகி றன என்பது வேதாந்தப் பிரசித்தமான கொள்கை. இந்தப் படைகளை அழிப்பதற்கு அருமையான படைகள் என்று கூறுவது கவனிக்கத் தக்க தீவினைகளை அழிப்பதே அருமை; நல்வினைகளையும் ஒழிப்பதென்று அருமையினும் அருமையல்லவா?

வெளியே வந்து சண்டை போடும் படைகளை அழித்த பிறகு, கோ டைகளை முற்றுகை யிட்டுப் பிடிப்பது வழக்கமல்லவா? அப்படியே ஞா வீரர்களும் இரு வினைகளையும் வென்று, பகையரண்களையும் கடந்து போ றார்களாம். காமம், வெகுளி (கோபம்), மயக்கம் என்ற மூன்று வ குற்றங்களையும் மூன்று வகைப் பகை-மதில்களாகக் குறிப்பிடுகின்ற ஞான நூல்கள். இந்த மூன்று கோட்டை மதில்களும் தள்ள முடிய பகை-அரண் என்கிறான் கவிஞன்.

இந்தத் தள்ளமுடியாத மதில்களையும் தாண்டி விட்டால் முத்தி யில் போவது எளிதான காரியந்தான். அப்பால் அந்த விருப்பமே மு தியை நோக்கி ஆகர்ஷித்துக் கொண்டு போய்ச் சேர்த்து விடுமாம்.

ஆனால் இப்படி யெல்லாம் மோட்ச விருப்பம் ஏற்படுவதற்கு அந்த முமுட்சுக்களின் மனம், சாதாரண விருப்பம் முதலான ஒருவகைப் பசையும் இல்லாமல் போய் விடுகிறதாம். தீவினையோடு நல் வினையும் விட்டொழித்துக் காமம் முதலான உணர்ச்சிகளையும் வென்று விடுவதென்றால், அந்த ஞான வீரர்களின் ஹிருதயம் பசையற்றுத் தானே போக வேண்டும்?

அப்படிப் பசையற்றிருக்கிறது பாலைவனம்! — என்று சொல்லும் நெஞ்சுத் துணிவைத்தான் பாருங்கள். அந்த ஞான வீரர்களின் பசையற்ற மனத்தோடு, அன்பில்லாத வேசையர்களின் பசையற்ற மனத்தையும் சேர்த்துப் பேசும் துணிவைத்தான் என்னென்பது? "முத்தியில்-போவது புரிபவர் மனமும், பொன் விலைப்-பாவையர் மனமும் போல் பசையும் அற்றதே!" என்ற பாலைவன வர்ணனையில் உயர்ந்ததும் தாழ்ந்ததும் எப்படிக் கைகோத்து வந்து குதிக்கின்றன, உபமானமாக!

இத்தகைய பசையற்ற பாலைவனத்தைப் பார்த்ததும், ராமன் விசுவாமித்திரனை நோக்கி, "என்ன அதிசயம்! எவ்வளவோ வளம் நிறைந்த கோசல நாட்டிற்கு அருகே இப்படி அழிந்து கொண்டிருக்கும் ஒரு பிரதேசமும் இருக்கிறதே! காரணம் யாதோ?" என்று கேட்டான். அதற்கு முனிவன், "இந்தப் பிரதேசமும் ஒரு காலத்தில் செழிப்பாகத்தான் இருந்தது. ஒரு பெண்ணின் கொடுமையினாலேயே இது இப்படி அழிந்து விட்டது!" என்று அந்த அரக்கி இருந்த திசையைச் சுட்டிக் காட்டிப் பதில் சொல்லத் தொடங்குகிறான்.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

25. என்ன அழகு! என்ன கொடுமை!

பிறர் செய்வதற்கு அருமையான — ஏன்? அபாயமான — தவங்
ச்செய்து முடித்தவன் விச்வாமித்திரன். இடையிடையே தவறிப்
னதுண்டு: அந்தத் தவறுதல்களையும் வெற்றியின் மைல் - கற்களாகக்
ண்டு வழி பிடித்துக் குறை முடித்தவன். எனவே அபாரமான
நம்பிக்கையுடன் அபாயமாக வாழ்க்கை நடத்தியதோடு, பிறர் கஷ்டங்
அறிந்துகொள்ளும் ஆற்றலும் மனோபாவமும் படைத்தவனாகவும்
ருந்தான்.

கொடிய தவங்களைச் செய்த விச்வாமித்திரனுக்கு இந்தப் பாலைவனத்
கொடுமையைத் தாங்குவது பெரிய காரியமா? ஆனால் "இந்த
ளங் குமாரர்கள் தாங்க வேணுமே இந்த வெம்மையை!" என்ற கொஞ்
கவலைதான். ராம லட்சுமணர்களுடைய அபார சக்தியும் தெரிந்தது
இல்லா விட்டால், தானே வலுவில் அயோத்திக்குப் போய் இங்கே
ழைத்து வந்திருப்பானா?

அழகு படுத்திய பாடு

சக்தி தெரிந்ததுதான். ஆனால் இந்த அழகு? "பூவைப்போல்
க்கிறார்களே! ஏன்? பூவைக் காட்டிலும் மேன்மை, மென்மை —
ரும் தான்!" என்றெல்லாம் தோன்றுகிறது. "பூவின் மெல்லியர்"
ர அந்தப் பொலிவைப் பார்த்துப் பார்த்துத் தனக்குள் தானே சொல்
கொள்கிறான். உடனே, "இந்தப் பூக்களும் வாடிப் போகுமோ,
ப் பாலைவனத்திலே?" என்ற எண்ணம் மேலிடுகிறது.

அதே சமயத்தில், இந்தப் பூப்போலும் மேனியழகிலே, நீறு பூத்த
ருப்பைப் போல், மறைந்து நிறைந்த அந்தப் பெரிய—அளவில்லாத —

கூற்றாலும் நினைவிற்கு வரத்தான் செய்கிறது. எனவே, "சிறிது வரு… வார்கள்!" என்று நினைக்கிறான்.

இப்போர்ப்பட்ட எதிர் எதிரான உணர்ச்சிகள் எழுந்து பூசல்… விச்வாமித்திர ஹிருதயத்தைப் பாருங்கள் :

எரிந்தெழு கொடுஞ்சுரம்
  இனைய(து) எய்தலும்,
அருந்தவன், "இவர் பெரி(து)
  அளவில் ஆற்றலைப்
பொருந்தினர் ஆயினும், 10
  பூவின் மெல்லியர்;
வருந்துவர் சிறி(து)!" என
  மனத்தில் நோக்கினான்.

[சுரம் — பாலைவனம். இனையது — இத்தன்மையது. எய்த… — அடைந்ததும்; அடைந்த அளவிலே.]



இப்படி யெல்லாம் நினைக்கிறன் விச்வாமித்திரன் — என்று சொல்ல லை கவிஞன். "மனத்தில் நோக்கினன்" என்கிறன். "மனக் கண் ல் நோக்கினன் அந்த இளங் குமாரர்களின் அந்தச் சிறிய வருத்தத்தை! ; மனோ பாவத்தால் அனுபவித்துப் பார்த்தான்!" என்றே சொல்லி, ந் ஹிருதயத்தை அப்படியே காட்டுகிறன், கவிதைக் கண்ணுடியிலே த்து. நாமும் கண்டு கொள்கிறோம், "அழகு படுத்திய பாடு இது!" று.

"ராம லட்சமணர்களையும் சிறிதாவது வருந்தச் செய்யும்!" என்று வாமித்திரனையும் நினைக்கச் செய்கிறதே, அத்தகைய கொடிய பாலை த்தை,

எரிந்தெழு கொடுஞ்சுரம்

று சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் கம்ப சித்திரம் நம்மையும் த்தில் நோக்கி நோக்கி வியக்கச் செய்கிறது. பாலைவனத்தைப் பிர மாக வர்ணித்து விட்டு அந்த முழு வர்ணனைப் படத்தையும் இந்தச் ணஞ் சிறு சொற் சித்திரமாய்ச் சுருக்கித் தருகிறனல்லவா? இது ! சித்திரத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று.



இந்தப் பிரதேசத்தை இப்படிப் பாலைவன மாக்கியவள், அஹிம்ஸா தர்மத்தை அறவே மறந்து ஹிம்ஸைக்கே தன் வாழ்க்கையை அர்ப் பணம் செய்த ஓர் அரக்கிதான் ("இன்னுயிர் கொன்று உழல் வாழ்க்கையள்") — என்று விச்வாமித்திரன் ராமனிடம் தெரிவிக்கிறன்.

தெரிவித்து, அந்தக் கொலைகாரியின் பெய ரையும் தெரிவிக்க விரும்பி,

சூடக அர(வு)உறழ்
 சூலக் கையினள்,
காடுறை வாழ்க்கையள்,
 கண்ணில் காண்பரேல்
ஆடவர் பெண்மையை
 அவாவும் தோளினாய்!
தாடகை என்ப(து)அச்
 சழக்கி நாமமே.

[சூடகம் — கைவளை; கங்க ணம். அரவு—பாம்பு. உறழ்— பொருந்திய. உறை—வசிக்கிற. அவாவும்—ஆசைப்படும். சழக்கி —கொடியவள்; குற்றவாளி.]

என்கிறன் முனிவன்.

விஷப் பாம்பைக் கங்கணமா கக் கட்டியிருப்பதே அரக்கியின் விஷம் போன்ற நெஞ்சிற்கும், சங்கல்பத்திற்கும் ஒரு சரியான அறிகுறி அல்லவா? "பாம்பு போன்ற சூலக் கையினள்" என்று கூறுவதைத் தான் பாருங்கள்.

"அவன் கையும் பாம்புபோல் இருக்கிறது; அந்தக் கையிலுள்ள பய...
மான் சூலாயுதமும் பாம்புபோல் நீண்ட உடலும் விரித்த படமும் உ...
யது!" என்பது குறிப்பு. தான் சுடுகாடாக்கிய இந்தப் பிரதேசத்தி...
தான் அந்தக் குற்றவாளி வசிக்கிறாள் என்றும் தெரிவிக்கிறான். "கு...
திற்கு வேறு சாட்சியும் வேணுமோ? கையும் களவுமாய்ப் பார்த்துக் கொ...
லாமே!" என்பது குறிப்பு.

ராமனைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்த முனிவன், அந்தப் ப...
கரியின் ஆயுதத்தையும், "காடுறைவாழ்க்கை"யையும் சொல்லிப் ...
ரைச் சொல்வதற்கு முன்னமே, ராமனுடைய திவ்ய சௌந்தரியத்தி...
மோகித்து மூழ்கிப் போகிறான். "கண்ணில் காண்பரேல், ஆ...
பெண்மையை அவாவும் தோளினாய்!" என்று ஆசை தீர முனி...
ராமனை அழைக்கிறானல்லவா?

புருஷோத்தமனான ராமனுடைய பேரழகு அருந்தவனாகிய விச்வா...
திரனுடைய கண்ணையும் கருத்தையும் அடிக்கடி வசீகரித்து விடுகி...
என்று ஊகிக்கலாம். ராம சௌந்தரியம் தசரதனை வசீகரித்ததுபோல் இ...
ஞானத் தந்தையையும் வசீகரித்து விடுகிறது.

தாடகையைக் குறித்துப் பேசிக் கொண்டிருக்கும்போதே, பொற...
முடியாத தாபம் ஏற்படுகிறதாம், இந்தப் பாலைவனத்தின் தாபத்தை...
அனாயாசமாகப் பொறுத்துக்கொண்ட விச்வாமித்திரனுக்கும். என...
தாடகை என்ற அந்தக் கொடிய பெயரை உச்சரிப்பதற்கு முன்பு ...
சௌந்தரியம் என்ற 'மானஸரோவரி'ல் மூழ்கி எழுகிறான் முனிவன்!...
என்றும் ரஸிகர்கள் பாவித்துக் கொள்ளலாம். இதுவும் அழகு படுத்...
பாடுதான்!

ராட்சஸியும் ராட்சஸ குணமும்

தாடகையைக் குறித்துப் பிரஸ்தாபித்ததும், "இனி, அந்த...
னுள்ளத்திலே ஒரு சந்தேகம் தோன்றக் கூடுமே" என்று எண்ணுகி...
முனிவன். "இவள் ஒரு நாட்டின் வளத்தையும் வனப்பையும் இப்...
அழித்து விட்டாள்? ஒருத்தியால் இப்படி யெல்லாம் செய்துவிட...
யுமா?" என்ற அந்தச் சந்தேகமும் ராமன் உள்ளத்தில் எழக்கூடும் என...
எதிர் பார்த்தவன் போல் பேசுகிறான் விச்வாமித்திரன்:

உளப்பரும் பிணிப்பறு
  உலோபம் ஒன்றுமே
அளப்பருங் குணங்களை
  அழிக்கு மாறுபோல்,
விளப்பருங் கொடுமைய
  அரக்கி, கேடிலா
வளப்பரு மருதவைப்(பு)
  அழித்து மாற்றினள்.

[உளப் பரும் பிணிப்பு — உள்ளத்தில் பெரிய பந்தம். அரு — நீங்காத. அளப்பருங் குணங்கள் — அளவிட முடியாத குணங்கள். அழிக்குமாறு — அழிக்கும் விதம். கிளப்பரு — சொல்ல முடியாத. கொடுமைய — கொடுமையை உடைய. வளப் பரு மருத வைப்பு — வளங்களையுடைய பெரிய மருத நிலம்; மருதம் — வயல்களும், வயல்கள் சூழ்ந்த இடமும்.]

இந்தப் பாலைவனமும் ஒரு காலத்தில் வளம் பொருந்திய வயற் காடுகளாகவும், அந்த வயல்களைச் சூழ்ந்த வாய்ப்பான ஊர்களாகவும் இருந்தது! — என்று பெருமூச்சு விடுகிறான் முனிவன். அந்த இயற்கைச் செழிப்பையெல்லாம் அப்படி வளர்த்தது மனிதன் கை; இப்படி அழித்தது அரக்கியின் கைதான்! ஆம், இந்த அரக்கியின் பயங்கரமான — பாம்பு போன்ற — சூலம் பிடித்த கைதான்! — என்கிறான்.

ஆம், ஆம்; இவள் ஒருத்திதான் காரணம் இந்த அழிவிற்கெல்லாம்: ராட்சஸ குணமான லோபம் ஒன்றே எத்தனையோ நற்குணங்களை அழித்து ஹிருதயத்தை வறண்டொழிந்த பாலைவனமாக்கி விடுகிறதல்லவா?



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ. 74

26. எரிமலை எதிரே வந்தது!

தாடகையைக் குறித்துப் பேசும்போதே லங்கேசனாகிய ராவணேசுவரனைக் குறித்தும் பிரஸ்தாபிக்கிறான் விசுவாமித்திரன். ராவண வதம் தானே ராமாயணத்தின் முக்கியமான செய்தி: அதற்காகத்தானே ராமன் பிறந்திருக்கிறான்? எனவே அந்தப் பெரு நிகழ்ச்சியை நாம் மறக்கும்படி விடுவதேயில்லை நமது கவிஞன்.

"இந்த வனமான பிரதேசத்தையெல்லாம் கெடுத்துவிட்ட தாடகை என்னுடைய யாகத்தையும் கெடுக்கிறாள்!" என்று சொல்ல வந்த விசுவாமித்திரன் எவ்வளவு சாதுரியமாகப் பேச்சோடு பேச்சாய், "இலங்கை அரச"னையும் ஞாபகப் படுத்துகிறான், பாருங்கள்:

இலங்கை அர சன்பணி
  அமைந்தொர் இடை யூரு,
விலங்கல்வலி கொண்(டு) எனது
  வேள்விநலி கின்றாள்;
அலங்கல்முகி லே! அவள் இவ் 73
  அங்கணிலம் எங்கும்
குலங்களொ(டு) அடங்கநனி
  கொன்றுதிரி கின்றாள்!

[பணி — ஏவல். ஓர் இடையூறு — ஓர் இடையூறாக. விலங்கல் வலி — மலையின் வலிமை. வேள்வி — யாகம். நலிகின்றாள் — கெடுக்கின்றாள். அலங்கல் முகிலே — மாலையை அணிந்த மேகமே. நனி — மிகவும்.

பேரனுக்குப் பணிசெய்யும் பாட்டி

ராவணனுடைய கட்டளையினாலேதான் விசுவாமித்திரனுடைய யாகத்தை அழிக்கிறாளாம் தாடகை. அந்தப் பிரதேசத்தை அப்படி அவள்

அழித்ததும் ராவணன் பணியினால்தான் என்பது குறிப்பு. தாடகை ராவணனுக்குப் பாட்டி முறையில் உள்ளவள்தான்: எனினும் பேரப் பிள்ளை சக்ரவர்த்தி யல்லவா? தீமைகளுக் கெல்லாம் மூல காரணமான ராட்சஸ ஏகாதிபத்தியத்திலே சக்ரவர்த்தியே சர்வாதிகாரி: பாட்டி யானாலும், பாட்டனானாலும் சரி, பணி செய்ய வேண்டிய அடிமைதான்!

பேரன் பணியைத்தான் பாட்டி எவ்வளவு நன்றாகச் செய்து விட்டாள்! விசுவாமித்திர சாட்சி போதாதா? ராமனிடம் முனிவன்,

"முன் உல(கு) அளித்து, முறை
நின்ற உயிர் எல்லாம்
தன் உணவு எனக்கருது
தன்மையினள்; மைந்த!
என் இனி உணர்த்துவ(து)
இவள் சிறிது நாளில்
மன்னுயிர் அனைத்தையும்
வயிற்றில் இடும்!" என்றான்.

[அளித்து — காப்பாற்றி. முறை நின்ற — முறையிலே நின்ற. என் — என்ன. மன் உயிர் — நிலையாக உள்ள உயிர்கள்.]

விசுவாமித்திரன் ராமனை "மைந்த!" என்று எவ்வளவு அருமையாக அழைக்கிறான்!

"நல் தந்தை நீ! தனித் தாயும் நீ!" என்று தசரதன் விசுவாமித்திரனுக்கு மைந்தனைக் கொடுத்து விட்டானல்லவா? அந்த நிமிஷம் முதல் விசுவாமித்திரனும் ராமனைத் தசரத புத்திரனாகக் கருதாமல் தன் மைந்தனாகவே நினைக்கிறான், பேசுகிறான்; செயலிலும் அப்படியே நடந்து கொள்ளுகிறான் — என்று ஊகஞ் செய்யலாம்.

இந்த ராமன் மகாவிஷ்ணுவின் அவதாரம் என்பது வசிஷ்ட மகரிஷிக்குத் தெரிந்ததுபோல் விசுவாமித்திர மகரிஷிக்கும் தெரிந்ததுதான். எனவே, "முன்பு நீ உலகத்தை யெல்லாம் ரட்சித்து, முறையாக நின்று பெருகும்படி வைத்தாயே உயிர்களை யெல்லாம், அந்த உயிர்களை யெல்லாம் பட்சித்துக் கொண்டிருக்கிறாள் இந்தப் பாலைவனச் சீமாட்டி!" என்கிறான். ரட்சிக்கிறவனுக்குத் தெரியுமல்லவா உயிர்களின் அருமை?

ராமனுக்கு உள் மனத்திலிருந்து அத்தகைய பழைய நினைவுகள் தோன்றினாலும் நல்லதுதான்! — என்று இப்படிப் பேசுகிறான் விசுவாமித்திரன். பிறகு திடீரென்று, "இன்னும் அதிகமாக உனக்கு உணர்த்த வேண்டியது என்ன இருக்கிறது?" என்கிறான். கடைசியாக, "அந்த ராக்ஷஸி இன்னும் சில நாளில் தன் வயிற்றை உயிர்களுக் கெல்லாம் இடுகாடாக்கி விடுவாள்!" என்று சொல்லி விடுகிறான்.

தொழில் புரிந்தது; — ஜாகை?

இது கேட்ட ராமன் என்ன பதில் சொல்லுகிறான்? ஏன்? பதில் சொல்லும் அந்த ராமனையே கம்பன் நம் கண்முன் காட்டி விடுகிறான்:

அங்கிறைவன் அப்பரி(சு)உ
　　ரைப்ப,அது கேளா,
கொங்குறை நறைக்குல
　　மலர்ச்செனிகு லுக்கா,
"எங்குறைவ(து) இத்தொழில்
　　இயற்றுபவள்?" என்றான், 75
சங்குறைக ரத்தொரு
　　தனிச்சிலைத ரித்தாள்.

[அங்கு — அவ்விடத்திலே; அப்பொழுது. இறைவன் — தலைவனாகிய விசுவாமித்திர முனிவன். பரிசு — விதம். கேளா — கேட்டு. கொங்கு உறை — வாசனை பொருந்திய. நறை — தேன். குல மலர் — சிறந்த மலர்கள். செனி — சென்னி; தலை. லுக்க — குலுக்கிக்



...... அப்போது அந்தப் பெற்ற தாய் பூச்சூட்டி ......

கொண்டு. உறைவது — வசிப்பது. சங்குறை கரத்து — சங்கு தங்
இடது கையிலே. தனிச் சிலை — ஒப்பற்ற கோதண்டம் என்ற வில்.]

பூச் சூட்டி யிருந்த தன் முடியைக் குலுக்கிக் கொண்டு, "இ
பேர்ப்பட்ட தொழிலைச் செய்கிறவள் எங்கே யிருக்கிறாள்?" என்று கே
கிறான் கோதண்டபாணி.

அந்தக் கோதண்டத்தை, "வில் — ஒன்று தாங்கினான், உலகம் தா
னான்!" என்று சொல்லும்படி இடது கையிலே தரித்துக் கொண்
உலகம் தாங்கப் புறப்பட்டானும் விசுவாமித்திரனோடு. தாயான கோச
யிடத்திலும் விடை பெற்றுக் கொண்டு தானே புறப்பட் டிருப்பான்
அப்போது அந்தப் பெற்ற தாய் பூச் சூட்டி விட்டிருக்கலா மல்லவா
அதைக் கவனித்த விசுவாமித்திரன், இந்தப் பாலைவனத்திற்குள் பிரவேசி
பதற்கு முன்பும் அப்படியே ராமனுக்குக் காட்டுப் பூக்களைச் சூட்டி அழ
பார்த்திருக்கலாம். "தாயும் நீ!" என்று சொல்லித்தானே தசரத
பிள்ளையை ஒப்புவித்தான்? ராமனுடைய அழகிலே தான் கொஞ்சமே
மோகம் விசுவாமித்திரனுக்கு?

அத்தகைய பூச் சூட்டிய தலையைக் குலுக்கிக் கொண்டுதான்
"அந்தச் சிமாட்டியின் தொழில் புரிந்துவிட்டது: ஜாகை எங்கே?
என்று கேட்டுவிட்டான். இப்படிக் கேட்ட ராமன் தசரத ராஜகுமார
னா? விசுவாமித்திரனது ஸ்வீகார புத்திரன் தானா?

சங்குறைக ரத்தொரு
தனிச்சிலைத ரித்தான்

— என்று எவ்வளவு பய பக்தியோடு கம்பன் காட்டுகிறான் தெய்வத்தி
பயங்கர அதிகார முத்திரையோடு வந்திருக்கும் வீரனை!

இடது கையில் ஏற்கெனவே யிருந்த சங்கைத் துறந்து வில்லை
தரித்துக்கொண்டான் சாமானிய வீரனைப் போலே என்கிறான், "பர
பதநாதன்" என்ற அந்தத் தெய்வ நிலை துறந்து மானுடச் சட்டையி
வந்த வீர மூர்த்தியை. இப்படிக் கவிஞன் குறிப்பிடுவது விசுவாமித்தி
னும் அந்த உண்மையை ஒருவாறு உணர்ந்திருக்கிறான் என்பதை
குறிப்பிக்கத் தான் என்றே தோன்றுகிறது. எப்படியும் தாடகை வத
நெருங்குகிறது: துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத்திற்காகச் செல்
ராமனை இப்படியும் அறிமுகப் படுத்துவது இந்த இதிகாசப் போக்கி
ஒரு விசேஷ காம்பீர்யம் தருகிறது.

நெருப்பெரிய....வந்தாள்?

இப்படி இவர்கள் பேசிக்கொண்டே அந்தப் பாலைவனத்தில் முரட்
குண்டாம் பாறைகளோடு கூடிய ஒரு குன்றுக்கு அருகே வந்தார்கள்.
போதுதான் தாடகையின் இருப்பிடத்தை ராமன் விசாரித்தான். ஆச்
யத்துடன் முனிவன், "அடடா, பேச்சுப் பராக்கில் அங்கேயே வந்து
டோமே!" என்கிறான்.

கைவரை எனத்தகைய
காளை உரை கேளா,
ஐவரை அகத்திடை
அடைத்தமுனி, "ஐய!
இவ்வரை இருப்பதவள்"
என்பதனின் முன்(பு)ஓர்
மைவரை நெருப்பெரிய
வந்ததென வந்தாள்.

[கைவரை — துதிக்கையோடு கூடிய மலை போன்ற யானை. எனத்தகைய — என்று சொல்லத் தக்க. காளை — வீரனான ராமன். கேளா — கேட்டு. ஐவர் — (இங்கே) பஞ்சேந்திரியங்கள். அகத்திடை — உள்ளத்திலே. வரை — மலை; (இங்கே) குன்று. மைவரை — கரிய மலை.]

அருகே குண்டாம் பாறைகளும், உருத் தெரியாதபடி உலர்ந்துபோன சிற்சில மூங்கில்களுமாயிருந்த குன்றைச் சுட்டிக்காட்டி, "இந்த மலைதான் அவள் இருப்பது!" என்றான் முனிவன். சொல்லி வாய்மூடுவதற்கு முன்பே ஒரு கரிய மலை எப்படியோ அந்தக் குன்றிலிருந்து விடுபட்டு நெருப்பைக் கக்கிக்கொண்டு எதிரே நடந்துவரத் தொடங்கியது: என்ன விபரீதம்! அந்த எரிமலைதான் தாடகை!



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

27. பேயா, பெண்ணா?

எரிமலை நகர்ந்து வரத் தொடங்கியதும், “ஒஹோ! செம்பட்டை யிரோடும், கோபாக்கினியோடும், கரு மலை போல வருகிறாளே: சரி, சரி; டகை என்ற மாமிச பர்வதம்தான்!” என்று தெரிந்து விட்டது.

தோற்றமும் பார்வையும்

வந்தவள் விசுவாமித்திர முனிவனையும் ராம லட்சுமணர்களையும் ஒரு பார்வை பார்த்தாள், நெருப்புப் பொறிகள் பறக்க. அந்தப் பார்வையின் கோர பயங்கரங்களை நாமும் பார்க்கிறோம் இந்தப் பாட்டிலே.

இறைக்கடை துடித்தபுரு
வத்தள், எயி(று) என்னும்
பிறைக்கடை பிறக்கிட
மடித்தபில வாயள்,
மறக்கடை அரக்கி, வட
வைக்கனல் இரண்டாய்
நிறைக்கடல் முளைத்தென
நெருப்பென விழித்தாள்.

[இறை—சிறிது. கடை—நுனி. எயிறு—பல்; (இங்கே) கோரப் பல். பிறை—சந்திரன். கடை—கடைவாய். பிறக்கிட — (வெளியே) ங்கித் தோன்றும்படி. பிலம் — குகை. மறக் கடை — பாவத்தின் டிவு. வடவைக் கனல்—வடவாமுகாக்கினி. நிறைக்கடல் — நிறைவுள்ள ல்.]

"என்ன கோரமான வாயும் பல்லும்! என்ன விழி! என்ன விழிப்பு! என்று பிரமித்துப் போகிறோம், செய்யுளைக் கேட்டதுமே. புருவம் நா... யிலே நடிக்க விழித்துப் பார்க்கும் தாடகை நமக்கும் பிரத்தியட்சமாகி வி... கிறாள்!

கோரப் பற்கள் பிறைச் சந்திரர் போல் பிரகாசிப்பதே எவ்வள... பயங்கரமாயிருக்கிறது! அப்படி அந்தப் பற்கள் கடைவாயில் வெளியே தெரியும்படி வாயை மடித்துக் கொண்டிருக்கிறாள். அந்த வாயைத் தா... பாருங்கள்—குகை போலே!

இப்பேர்ப்பட்ட முகத்திலே அந்தக் கண்கள் — உள்ளத்தின் பலக... வாசல் அல்லவா? — உள்ளேயிருந்து நெருப்பு எழுவது போல் சிவந்... விளங்குகின்றன! நெருப்பு என்றால் சாதாரண நெருப்பு என்றுகூட தோன்றவில்லை. எந்த நெருப்பிற்கு இந்தக் கொடுமை — பார்த்தது... எரித்து விடக் கூடிய இந்தச் சக்தி — உண்டு!

எனவே கவிஞன் வியாக்கியானம் செய்கிறான்: "கடலிலே வடவாமுகாக்கினி என்று ஏதோ ஒரு பயங்கர அக்கினி இருப்பதாகவு... அது கடலையும் வற்றி வறண்டு போகும்படி செய்யக்கூடுமென்றும் சொல்... கிறீர்களல்லவா? அந்த அக்கினி அந்தக் கருங் கடலிலே இரண்டு கூறுக... தோன்றி ஜொலித்து எரிவதுபோல் எரிந்து கொண்டிருக்கின்றன தாடகை... யின் முகத்திலும்! அந்த நெருப்புக் கூறுகள் தான் அவள் கண்கள்!"

"மறக் கடை அரக்கி" என்று கவிஞன் அந்த அரக்கியை அறிமுக... படுத்துகிறான். பாப சிகரமே அப்படி வந்து நிற்கிறதாம்.

இந்தப் பாட்டைப் பாடிப் பார்க்க வேண்டும்; பாடிப் பாடிப் பார்க்க... வேண்டும். இதன் வல்லோசை எவ்வளவு ரஸமாகக் காதில் விழுந்... எவ்வளவு நன்றாக நம் மனக் கண்முன் தாடகையைப் படம் பிடித்து... காட்டுகிறது! தாடகையின் வலிய கொடிய தோற்றத்தை மட்டுமா இந்... வல்லோசைச் சித்திரம் வெளியிடுகிறது? அந்தப் பாலைவனப் பெருமாட்... டியின் வலிய கொடிய குணம், செயல்களையும் அப்படியே 'சப்த சித்திர... பிடிக்கப் பார்ப்பது போலிருக்கிறது!



என்ன ஆர்ப்... பாட்டம்!... என்ன பேச்... என்ன வ... லை! என்ன பா... வை! வருகைப்... பார்வையுமே இ... படி என்றா... தாடகைப் பிரா... டியின் ஆரவா... மும் அட்டகா... மும்எப்படித்தா... இருக்குமோ?

ஆர்த்(து).அவரை நோக்கி,நகை
செய்(து)எவரும் அஞ்சக்
கூர்த்தநுதி மூத்தலை
அயில்-கொடிய கூற்றைப் 78
பார்த்(து)எயிறு தின்று,பகு
வாய்முழை திறந்(து).ஓர்
வார்த்தைஉரை செய்தனள்,
இடிக்கும்மழை அன்னாள்.

[ஆர்த்து — ஆரவாரம் செய்து. கூர்த்த—கூர்மையான. நுதி—நுனி. அயில் — சூலம். கூற்றை — எமனை. எயிறு தின்று—பல்லைக் கடித்து. பகு — பிளவு பட்ட. முழை — குகை.]



ஆரவாரம் செய்து ஒரு பேய்ச் சிரிப்புச் சிரிக்கிறாள் தாடகை. அந்தச் சிரிப்பை நெருப்பு என்றாலும் போதாது: அந்த இகழ்ச்சியே போதும், படை படை வீரர்களையும் வென்று வலி அழிப்பதற்கு!

இகழ்ச்சியோடு இவர்களைப் பார்க்கிறாளா? அதுதான் இல்லை; தன் சூலாயுதத்தைத்தான் பார்க்கிறாளாம். அவ்வளவு இகழ்ச்சி!

சூலாயுதமென்றால் சூலாயுத மில்லையாம்: ஸாக்ஷாத் எமன்தான் அந்த உருவத்திலே அவள் கையில் அப்படி வந்து இருந்து கொண்டு உயிர்களை யெல்லாம் கவர்ந்து செல்லப் பார்க்கிறானோ? — என்று பிரமிக்கும்படி யிருக்கிறதாம் அந்தக் கொடிய ஆயுதம்.

சரி: சூலாயுதம் என்ற கொடிய எமனை ஒரு பார்வை பார்க்கிறாள் தாடகை,—"அவர்களுடைய உயிரை உனக்கு விருந்தாக்குகிறேன்!" என்று அதை உத்ஸாகப் படுத்துவது போலே.

அப்பால் பற்களை நெறு நெறு என்று கடித்து வாயைக் குகைபோல் திறந்து பேசத் தொடங்குகிறாள், இடிக் குரலிலே.

அந்தப் பேச்சு எப்படித்தா னிருக்குமோ?—என்று பிரமிக்கிறீர்கள் அல்லவா? கேளுங்கள்:

"கடக்கரும் வலத்(து)எனது
காவல்இது; யாவும்
கெடக்கரு அறுத்தனன்! 79
இனிச்சுவை கிடக்கும்
விடக்(கு)அரி(து) எனக்கருதி
யோ?விதிகொ(டு) உந்தப்
படக்கருதி யோ?பகர்மின்,
வந்தபரி(சு)" என்றாள்.

[கடக்க அருவலம்—(எவராலும்) கடக்க முடியாத பலத்தையுடைய. அறுத்தனன்—அறுத்தேன். விடக்கு—மாமிசம். கொடு—கொண்டு. உந்த—தித்துத் தள்ள. பட—அழிந்து போக. பரிசு—விதம்.]

பாட்டைப் பாடப் பாடத் தாடகையின் பேச்சும் குரலும் எப்படியோ நம்முடைய காதிலே வந்து விழுகின்றன! அவள் பேசும் தோரணையே எவ்வளவு பயங்கரமா யிருக்கிறது! அந்த ஹாஸ்யங்கூடப் பீதியை அதிகப் படுத்துகிறது. சிங்க கர்ஜனையிலேயே நடுங்கி உயிரொடுங்கிப் போகும் யானைபோல, எந்த வீரனும் அசந்து போக வேண்டியது தான் இந்த ஆர்ப்பாட்டத்தின் முன்னே! ஆனால் இம் மூவரும் நிதானமாக அந்தப் பேச்சைக் கவனிக்கிறார்கள்.

“என் ராஜ்ய மாச்சே!” என்கிறாள். இந்த ராஜ்யத்தை “எனது காவல்” என்று குறிப்பிடுகிறாள். “எவ்வளவு அழகாய்க் காவல் செய்கிறாள் ராஜ்யத்தை இந்த ராணி!” என்று ராமன் யோசிக்கும் போதே, “யாவும் கெடக்கரு அறுத்தனன்!” என்று பெருமை பாராட்டுகிறாள். உயிர்க் குலத்தைக் கரு அறுத்த இந்த ‘மகாராணியின்’ மாட்சியே மாட்சி! ஆனால், பொன் முட்டையிடும் வாத்தைக் கொன்று ஒரே அடியாகப் பொன் முட்டைகளை யெல்லாம் எடுத்துக் கொள்ளலாம் என்று எண்ணிய பேராசைக்காரனுடைய நிலைமையாகி விட்டது இவளுடைய நிலைமையும்! வெற்றெலும்பு தவிரச் சிறிது மாமிசம் ஒட்டி யிருக்கும் எலும்பு கிடைப்பதும் அரிதாகி விட்டது அந்தக் காவலிலே, அந்த ராஜ்யத்திலே!

எனினும் இந்தக் கவலை ஏற்பட்டபோதே யோகமும் வந்து விடுகிறதாம், ராம லட்சுமண வடிவங்களிலே. “என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்! சுவையுள்ள மாமிசம் இனிமேல் இங்கே கிடைக்காது! — என்பது உங்களுக்கு எப்படித்தான் தெரிந்ததோ?” என்கிறாள். “எனக்கு உணவு தர வேணுமென்று உடம்பை இவ்வளவு அருமையாக வளர்த்துக் கொண்டு வந்திருக்கிறீர்களே!” என்கிறாள். “என் இரை என்னைத் தேடி வந்துவிட்டது!” என்று பூரிக்கிறாள். “உங்கள் கருணையே கருணை; உங்கள் தியாகமே தியாகம்; உங்கள் புத்தியே புத்தி!” என்று ஏளனம் செய்கிறாள். கடைசியாக, “விதியே பிடர் பிடித்துத் தள்ள வந்து விட்டீர்களா?” என்று பயமுறுத்துகிறாள் பாலைவன ராணி. தன்னுடைய அதிர்ஷ்டமும் அவர்களுடைய துரதிர்ஷ்டமுமாகிய விதிதான் அவர்களை அப்படி அங்கே கொண்டு வந்து விட்டதாம்.

இப்படி யெல்லாம் உறுமிக் காலால் நிலத்தை உதைத்துக் கொண்டு, “இந்தச் சூலத்தை இவர்கள் மார்பிலே எறிவேன்” என்று தீர்மானித்து விட்டாள். அதே சமயத்தில் ‘ராமன் அவளைக் கொல்ல வேண்டியதுதான்’ என்று விசுவாமித்திரன் சங்கல்பம் செய்து விட்டான். அது ராமனுக்கும் தெரிந்து விட்டது, முனிவனுடைய முகக் குறிப்பிலிருந்தே. எனினும் ராமன் பளிச்சென்று அம்பு தொடுக்க வில்லையாம். ஏன் அப்படி ?

அன்னல்முனி வற்(கு)அதுக
ருத்தெனினும், “ஆவி ௪௦
உண்!” எனவ டிக்கணைதொ
டுக்கிலன்; உ யிர்க்கே
துன்னெனும்வி னைத்தொழில்தொ
டங்கிஉள ளேனும்,
பெண்ணெனம னத்திடைபெ
ருந்தகைநி னைந்தான்.


[அண்ணல் முனிவற்கு—பெருமை வாய்ந்த விசுவாமித்திர முனிவனுக்கு. ஆவி—உயிர். வடிக் கணை—கூர்மையாக வடித்த அம்பு. தொடுக்கிலன்—தொடுக்கவில்லை. துண்ணெனும் வினைத் தொழில் — கொடிய ஆபத்தான செயல்.]

தங்கள் உயிருக்கே ஆபத்தான செயலை அவள் செய்யத் தொடங்கி விட்டாள் என்பது ராமனுக்குத் தெரியாதா? தற்காப்பைக் குறித்துக்கூட ஆலோசிக்காதபடி அப்படிச் சோம்பி யிருக்க என்ன நேர்ந்து விட்டது? ஒரே நினைவுதான் அந்த அழகிய உள்ளத்திலே.

பெண்ணெனம னத்திடைபெ
ருந்தகைநி னைந்தான்!

என்று கவிஞன் ராமனுடைய அந்த உதார சித்தத்தை எவ்வளவு எளிமையாகவும் அழகாகவும் வெளியிடுகிறான், பாருங்கள்!

கோபாக்கினியைக் கக்கிக் கொண்டு வந்த பாப சிகரமாகிய தாடகைப் பேயையும் பெண்ணென்று நினைத்துக் கூசி நின்ற "பெருந் தகை"யை மறக்க முடியாதவண்ணம் சித்திரித்து விடுகிறது நம் மனோ பாவத்திலே, "பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான்!" என்ற மந்திரக் கவிதை.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

28. ஹிம்ஸையா, அஹிம்ஸையா?

"சூலாயுதத்தை எறிந்து அவர்களைக் கொன்று விடுவேன்" என்று டகை எதிர்த்து வந்த நிலையிலும், "பெண்ணல்லவா?" என்று எதிர்ப் ர்வை பார்க்கவும் லஜ்ஜைப்பட்டு நிற்கிறான் ராமன். அந்த நிலையிலேயே வனது சிந்தைக் கருத்தெல்லாம் விசுவாமித்திரனுக்கு விளங்கி விடுகிறது.

மாது சிரோமணியா?

"இப்படியா செய்தி? இவளும் பெண் தெய்வமா?" என்று பேசும் சுவாமித்திரன்,

'தீதென்(று) உள்ளவை
யாவையும் செய்(து),எமைக்
கோதென்(று) உண்டிலள்,
இத்தனையே குறை; 81
யாதென்(று) எண்ணுவ(து)
இக்கொடி யாளையும்
மாதென்(று) எண்ணுவ
தோ?மணிப் பூணினாய்!

[கோது—சக்கை. மணி—இரத்தினம். பூண்—ஆபரணம்.]

று சொல்ல ஆரம்பிக்கிறான்.

'தீது' 'தீமை' என்ற சொல்லுக்குப் பொருளாக 'இந்தத் தாடகை வதெல்லாம்' என்று அகராதியில் குறிப்பிட்டாலே போதுமாம். "இப் ப்பட்ட கொடியவளையும் 'மாது சிரோமணி' என்று எண்ணுவதோ? ன்கிறான் விசுவாமித்திரன்.

இப்படிச் சொல்லும்போதே ஒரு சந்தேகமும் ஏற்படுகிறது. அதா ராமனுக்கு அப்படி ஒரு சந்தேகம் ஏற்படுமோ?—என்ற சந்தேகம் "முனிவர் தாடகையை அவ்வளவு கொடியவள் என்று சொல்லு

கிறாரே, ஆனால் அவள் இருப்பிடத்திலிருந்து அதிக தூரமில்லையே இவர்
வேள்வி செய்யும் சித்தாசிரமம்! இவரை இவள் இதுவரை ஒன்றும் செ
தாகத் தெரிய வில்லையே!" என்று ராமன் உள்ளத்தில் ஒரு நினைப்பு
படக் கூடுமல்லவா? "ஜீவ ஹிம்ஸையே தொழிலாகக் கொண்டவள், இ
முனிவரைத் தின்னாமல் விட்டு விட்டாளே!" என்ற அந்தச் சந்தேகத்
எதிர்பார்த்துத்தான், "எமைக் கோது என்று உண்டிலள், இத்தனை
குறை!" என்கிறான் முனிவன்.

அவள் தன்னைப் போன்ற முனிவர்களை உண்ணாதது தங்
குறைதானும். தவமும் வேள்வியும் செய்து உடல் வற்றி எலும்பும் தோ
மாய் இருக்கிறானல்லவா விசுவாமித்திரன்? எனவே "இந்த உடம்பு இ
ச்சி என்ற பசையில்லாத சக்கைதான்!" என்றே தின்னாமல் விட்டு
திருக்கிறாளாம் தாடகையம்மாள். "இதனால்தான் எம்மைப் போல
முனி சிரேஷ்டர்கள் பிழைத்திருக்கிறார்கள்!" என்பது முனிவன் குறிப்

"இப்படிப்பட்ட பேர்வழியைப் பேய், பூதம், துஷ்ட மிருகம் முதல
வர்க்கங்களில் எந்த வகுப்பிலே சேர்த்து எண்ணுவது?" என்பது தெ
வில்லையாம். "வேறு எந்த இனத்தில் சேர்த்தாலும், தாய்க் குலமா
பெண் குலத்தில் மட்டும் சேர்ப்பது தகாது, தகாது" என்கிறான் விச்
மித்திரன்.

பிறகு, யமனைக் காட்டிலும் கொடியவள் தாடகை என்று சொல்
"இப்பேர்ப்பட்டவளும் மாதரசியோ, பெண் தெய்வமோ?" என்று கே
கிறான்.

'சாற்று நாள் அற்ற(து)'
என்று தருமம்பார்த்(து),
ஏற்றும் விண்ணென்ப(து)
அன்றி, இவளைப்போல்
நாற்றம் கேட்டனும்
தின்ன நயப்பதோர்
கூற்றும் உண்டுகொல்?
கூற்(று)உறழ் வேலினாய்!



[சாற்றும் நாள் — (விதியின்ப
விதித்திருக்கும் ஆயுள் நாள். விண்
மேல் உலகம். நாற்றம் — வாச
உண்டு கொல் — உண்டோ. கூற்
யமன். உறழ்—போன்ற.]

என்ற கேள்வியில், அந்தக் கொடு
எவ்வளவு கடுமையான பாவ
வெளிப்படுகிறது!

'யம பாதகன்' என்று சொ
கிறார்களல்லவா? உண்மையில், ய
அவ்வளவு பாதகன் இல்லையாம்.
தருமன்தான், யமதர்ம ராஜா எ
தான் சொல்ல வேண்டும். த
பார்த்து, ஆயுள் முடிந்த நாள் பார்த்
உயிரைக் கொண்டு போகிறானல்ல
தாடகைக்கோ அந்தக் கவலை
லாம் கிடையாது. ஆயுளைப் பா
மாட்டாள்! அறத்தையும் பார்க்க
டாள்!

நா வாசனை மூக்கிலே பட்டால் போதும்!—என்று கூடச் சொல்ல வில்லை விசுவாமித்திரன். "நாற்றம் கேட்டதும்" தின்ன விரும்புகிறு ளாம். "நர வாசனை வீசுகிறது" என்று யாராவது சொல்லக் கேட்டா லும் போதும், உடனே ருசி பார்க்கக் கிளம்பி விடுகிறுளாம்.

"இப்படிப்பட்ட ஆசாமியைப் பின்னித் தொங்கவிட்ட கூந்தலோடு கூடிய நிரபராதியான—குற்றமே தெரியாத—சிறுமி என்று நினைக்கிறுய்?" என்கிறுன் விசுவாமித்திரன் :

மன்றும் பல்உயிர்
    வாரித்தன் வாய்ப்பெய்து
நின்றும் புன்மையில்
    நிமை எதோ, ஐய!
பின்னும் தாழ்குழல்
    பேதைமைப் பெண்இவள்
என்னும் தன்மை,
    எளிமையின் பாலதே!

[மன்றும்—பொருந்திய; நிலைபெற்ற. பல்—பல. உயிர்—(இங்கே) பிராணிகள். வாய்ப்பெய்து—வாயிலே போட்டுக் கொண்டு. புன்மையில்—இழிமையைக் காட்டிலும். தாழ் - தாழ்ந்து தொங்குகிற. குழல் - கூந்தல். பேதைமை—(இங்கே) குற்றமற்ற தன்மை. எளிமை - (இங்கே) அறி வில் எளிமை; அதாவது புத்திக் குறைவு. எளிமையின் பாலதே - எளி மையின்பால் படுவதே.]

"என்ன? ஹிம்ஸையைக் காட்டிலும் தீமை என்பதும் உண்டோ? இந்தத் தாடகை உயிர்களை ஹிம்ஸித்துத் தின்னுகிறவளல்லவா? இவளை யும் பெண்ணென்று நினைப்பது புத்திக் குறைவுதான் என்று விசுவாமித் திரன் சொல்லும்போது, அந்த உறுதியான குரலே நம் காதில் வந்து விழு வது போலிருக்கிறது.

வசிஷ்ட மகரிஷியின் ஞான புத்திரனை ராமனை நோக்கி ராஜ ரிஷி யான விசுவாமித்திரன், "உனக்கு உலக ஞானம் போதாது. அதனுல் தான் மின்னுவதெல்லாம் பொன்னென்று மயங்குகிறுய்! இவளையும் பெண் ணென்று நினைக்கிறுய்! அப்படி நீ எண்ணுவதானுல், ராமா! அது உன் புத்திக் குறைவைத் தான் காட்டுகிறது!" என்று எவ்வளவு தெளிவாக, எவ்வளவு துணிவாகச் சொல்லி விடுகிறுன்!

கொல்லுவதே அருள்!

கடைசியாக முனிவன், தான் ஒரு நீதிபதியின் நிலையிலிருந்து தீர்ப்புச் சொல்லுவதாகவே பேசுகிறுன்.

'ஈறில் நல்லறம்
    பார்த்(து)இசைத் தேன்; இவள்
சீறி நின்றிது
    செப்புகின் றேன்அலேன்:
ஆறி நின்ற(து)
    அருளன்(று); அரக்கியைக்
கோறி' என்(று)எதிர்
    அந்தணன் கூறினுன்.

[ஈறில்—முடிவில்லாத. இசைத்தேன்—சொன்னேன். கோறி—கொல்வாயாக. அந்தணன்— (இங்கே) ஜீவகாருண்ய மூர்த்தியான முனிவன்.]



தருமம் என்ற சட்டப் புஸ்தகத்தைப் பார்த்துத்தான் இந்த நீதி தாடகைக்கு மரண தண்டனை விதிக்கிறானும். அந்தச் சட்டப் பு கத்திலோ இந்தியன் பீனல் கோடைப் போல் இத்தனை ஸெக்ஷன் தான் உண்டு என்று வரையறுத்துச் சொல்ல முடியாது. முடி லாத சட்டப் பிரிவுகளோடு கூடிய நல்லறம் என்ற அந்தச் சட்டப் தகம்; ராஜ ரிஷியும் மகா தபஸ்வியுமான விசுவாமித்திரன் மனக் முன்னே விரிந்து கிடக்கிறதாம். அதிலுள்ள ஒரு 'ஸெக்ஷன் "தாடகையைக் கொல்வதே அருள் அல்லது அஹிம்ஸை!" என்கிற முனிவன்.

நீதிபதிக்குக் குற்றவாளிமீது கோபம் உண்டா? துவேஷம் உண் தனக்கும் தாடகைமீது கோபம் கிடையாது என்கிறான்.

"இதைக் குறித்துப் பின்னால் ஆலோசித்துப் பார்ப்போம் என் பொறுமையோடு இருந்தாலும், அது அருளாகாது!" என்றும் ராமனு எச்சரிக்கை செய்கிறான். "ஆறி நின்றது அருளன்று" என்று கூற கவனிக்கத் தருந்தது. "இனிமேல் நீ தாமதம் செய்தால் இந்த அ செய்யும் கொலைகளுக் கெல்லாம் கூட்டாளியாகிறாய், பொறுப்பாளி கிறாய்!" என்கிறான்.

"தாடகையைக் கொல்ல வேணும்; இன்றே கொல்ல வேணும், போதே கொல்ல வேணும்; தயங்காமல், தாமதியாமல் கொல்ல வேணு இதுவே அருள்!" என்று கூறும் ராஜ ரிஷியின் மன நிலையையும் வெ ஞானத்தையும் பாருங்கள்.

ஒரு சமயம் பைத்திய வெறிகொண்ட நாயைக் கொல்லுவது அஹிம் தர்மம் என்றார் மகாத்மா காந்தி. லோக சமுதாயத்திலே ஒரு பைத் வெறிகொண்ட நாய் போலவும், கொலை வெறிகொண்ட பேய் போல திரிகிறவள் தாடகை என்பது விசுவாமித்திரன் குறிப்பு.

"தாடகையைக் கொல்லுவது லோகத்திற்கு மட்டுமல்ல, அவளுக் அருள் செய்வதுதான்! ஏனென்றால் அவள் பாவச் சுமையை ஒழி தற்கு வேறு வழியே கிடையாது" என்று கூறும் விசுவாமித்திரனை களுக்கு அருள் பூண்டு ஒழுகும் அந்தணன் என்று கம்பன் பாராட்டுகிற



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

29. தாடகை வதம்

வசிஷ்ட மகரிஷியின் சிஷ்யனும், இளைஞனுமான ராமனுக்கு "ஹிம் ஸையே அஹிம்ஸையுமாகும்" என்ற அந்தக் கொள்கை அவ்வளவு தெளி கப் புரியவில்லை என்றுதான் எண்ண வேண்டி யிருக்கிறது. ராமன் ல்லும் பதிலைக் கேளுங்கள் :

ஐயன் அங்(கு)அது
    கேட்(டு), "அறன் அல்லவும்
எய்தி னல்,அது
    செய்கஎன்(று) ஏவினல்,
மெய்ய! நின்உரை 85
    வேதம்என எக்கொடு
செய்கை அன்றோ,
    அறஞ்செயும் ஆ(று)?" என்றான்.

[ஐயன் — ராமன். அங்கு — அப்பொழுது. எய்தினல் — அடைந் ல். நின்—உன். கொடு—கொண்டு ஆறு—விதம்.]

விசுவாமித்திரனை "மெய்ய!" என்று அழைப்பதைப் பாருங்கள். தியத்தை அறிந்திருப்பவன் அல்லது பரிசீலனை செய்பவன் இந்த ராஜ என்பது குறிப்பு. உலகத்திலே சிற்சில மகா புருஷர்கள் சத்திய தனைக்கே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்து விடுகிறார்கள். தகைய வசதியும் அனுபவமும் பெறாதவர்களெல்லாம், "எங்களுக்கு முழுதும் விளங்கினல்தான் நாங்கள் பின்பற்றுவோம்!" என்று ல்லிக்கொண்டிருந்தால், உலகத்தின் கதி என்ன ஆகும்? மகான்களைச் ய சேனபதியாக மதித்து, அவர்கள் வாக்கையும் வேத வாக்காக த்து, அந்த மகத்தான சேனையில் போர்வீரனுகச் சேர்ந்து கொண்டு யத்திற்காகப் போராடுவது மற்றவர்களுக்கும் கடமையாகும், தர்ம கும். இந்த உணர்ச்சியோடுதான், "தாடகையைக் கொல்வதும் அஹிம்



ளையாகத்தான் இருக்க
வேணும்! '' என்று எண்
ணித் தாடகைவதம் செய்ய
துணிகிறான் ராமன்.

தற்காப்புப் போர்

இப்படியெல்லாம் ஒப்புக்
கொண்டும் ராமன் பணிந்து
சென்று தாடகைமேல் அம்பு
போட வில்லையாம். அவள்
தான் போர் தொடங்கு
கிறாள், இவர்களுடைய கருத்
தை ஊகித்துக் கொண்டே
(இராஜல், அந்தக் கொடிய அரக்கி அறிவுத் திறமை
யிலும் குறைந்தவளில்லை என்று ஏற்படுகிறது.)

கங்கைத் திம்புனல்
நாடன் கருத்தையும்,
மங்கைத் தீஅனை
யாளும் மனக்கொளா,
செங்கைச் சூலவெந்
தீயினைத் தீயதன்
வெங்கண்—தீயொடு
மேற்செல விசினாள்.

[கங்கைத் திம்புனல்நாடன் — கங்கா நதியின் இனிய தீர்த்தத்தை
கொண்டுள்ள கோசல நாட்டை யுடைய ராமன். மங்கைத் தீஅனையாள் —
மங்கை வடிவம் கொண்ட தீயை ஒத்தவள். மனக்கொளா — மனத்தில்
கொண்டு. செங்கை — சிவந்த கை. வெந்தீ—கொடிய தீ. தீய —
கொடிய; தீமை நிறைந்த. வெங்கண்—கொடிய கண்கள்.]

"கங்கைத் திம்புனல் நாடன்" என்று குளிர்ந்த அருளோடு கூடிய ராமனைக் குறிப்பிட்டு, அந்த நல்லருளோடு முற்றும் முரண் பட்ட கொடிய தாடகையை "மங்கைத் தீஅனையாள்" என்று குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. "மங்கை வடிவம் கொண்ட தீ" என்று தாடகையைக் குறிப்பிடும் கவிஞன், "அவள் கையிலும் தீ; கண்ணிலும் தீ!" என்கிறான். ஆயுதம் பிடித்துப் பிடித்துச் சிவந்திருக்கும் அந்தக் கையிலே, சூலா யுதம் தீயைப் போலவே ஜொலிக்கிறது. தீமை நிறைந்த அந்த உள் ளத்தைப் பிரதிபலிக்கும் கண்களும் கோபத்தால் சிறித் தீயாகவே ஜொலிக் கின்றன. தாடகையின் தோற்றம் முழுமையும் தீயைப் போலவே ஜொலிக் கிறதாம்.

மங்கை வடிவம் கொண்ட தீ, சூலாயுதம் என்ற தீயைத் தீய கண் களில் வீசும் கோபத் தீயிலே காய்ச்சி வீசுவதாய்க் கூறுவது, அந்தக் காட் சியை நம் உள்ளத்திலும் அப்படியே ஜொலிக்கச் செய்கிறது.

இப்போது தான் ராமன் அம்பைத் தொடுக்கிறான். அவளைக் கொல் வதற்காக அல்ல; தற்காப்புக்குத்தான்:

87 83

மாலும் அக்கணம்
வாளியைத் தொட்டதும்,
கோல விற்கால்
குனித்ததும், கண்டிலர்:
காலனைப் பறித்(து)
அக்கடி யாள்விட்ட
சூலம் அற்றன
துண்டங்கள் கண்டனர்.

[மால்—விஷ்ணுவின் அவதாரமான ராமன். கணம்-க்ஷணம். வாளி—அம்பு; பாணம். கோல வில் - அழகிய வில். விற்கால் - வில்லின் தண்டு. குனித்ததும்—வளைத்ததும். கடியாள்-கொடியவள்.]

ராமன் பாணத்தைத் தொட்டதையும், வில்லை வளைத்ததையும், ஒருவரும் பார்க்க வில்லையாம். தாடகை பார்க்கவில்லை என்று கவிஞன் சொல்லவில்லை. லட்சுமணனும் விசுவாமித்திரனும் கூடப் பார்க்க முடியவில்லையாம். தாடகை வீசின சூலம் அறுபட்ட துண்டங்களைத்தான் பார்த்தார்களாம். அவ்வளவு வேகமாக அந்தச் செயல்கள் நிகழ்ந்து விட்டன.

வில்லை வளைத்து அம்பைத் தொடுத்தான் என்று சொல்லாமல், பாணத்தைத் தொட்டு வில்லை வளைத்தான் என்று சொல்வது கவனிக்கத் தக்கது. அவ்வளவு படுவேகமாய்க் காரண காரியங்கள் நடந்து விட்டன என்பது குறிப்பு. அந்தக் கொடிய சூலத்தைத் தான், "காலனைப் பறித்து அக் கொடியவள் விட்ட சூலம்" என்று சொல்வதைப் பாருங்கள். தாடகை இருக்கும் இடத்தில் யமனும் இருக்கத் தானே செய்வான்? அந்த யமனை அப்படியே இடம் விட்டுப் பறித்து எதிரிமேல் எறிந்து விட்டாளோ? - என்று தோன்றுகிறதாம் அந்தப் பயங்கரமான சூலத்தின் பயங்கரமான புறப்பாடு.



சூலம் துண்டு துண்டாய் விழவும் நிராயுதபாணி ஆக்கப்பட்டாள் அரக்கி. எனினும் அவளுடைய தீய அறிவு சும்மா இருக்குமா?

அல்லின் மாரி
அனைய நிறத்தவள்,
சொல்லும் மாத்திரை
யில்கடல் தூர்ப்பதோர்
கல்லின் மாரியைக்
கைவகுத் தாள்: அது
வில்லின் மாரியின்
வீரன் விலக்கினான்.

[அல் — இருள். மாரி — மழை. அனைய — போன்ற. மாத்திரையில் — அளவிலே. கை வகுத்தாள் — கையால் எடுத்துப் பெய்தாள்.]

"இருளே மழையாகப் பொழிகிறது!" என்று சொல்லும்படி நின்ற தாடகை, கற்களை மழையாகப் பொழிந்து விட்டாளாம். அந்தக் கல்-மழையை ராமன் வில் - மழையாகிய பாணங்களால் தடுத்து விட்டான்.

இனிமேல்தான் ராமன் தாடகையைக் கொல்ல வேணுமென்ற பாணத்தைப் பிரயோகிக்கிறான். சூலத்தை வீசியபோதும் கொல்ல நினையாதவன், அவள் கல்-மழை பொழிந்தபோது, "முனி சிரேஷ்டருக்கும் ஆபத்து விளையக் கூடுமே!" என்று எண்ணி, அரக்கியைக் கொல்லப் பாணம் பேடுகிறான்.

நெருப்பைக் கக்கிக் கொண்டு போகும் அந்த ராம பாணத்தின் கடிய வேகத்திற்கும், சுட்டெரிக்கும் தன்மைக்கும் என்ன உபமானம் கொடுக்கிறான் கவிஞன்! தன்னைப் போன்ற மகா கவிகளுடைய நெருப்பைக் கக்கும் சொல்லைத்தான் உபமானமாக்குகிறானா? அல்லது மகா குருவாகிய விசுவாமித்திரனைப் போன்ற மகரிஷிகளின் சுடுசொல்லாகிய சாபச் சொல்லைத்தான் உபமானமாக்குகிறானா?

அதோ பாருங்கள் அந்தக் கடிய வேகத்தையும் போக்கையும்:

சொல்ஒக்கும் கடிய வேகச்
சுடுசரம், கரிய செம்மல்,
அல்ஒக்கும் நிறத்தி னாள்மேல்
விடுதலும், வயிரக் குன்றக்
கல்ஒக்கும் நெஞ்சில் தங்கா(து)
அப்புறம் கழன்று, கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன
பொருள்எனப் போயிற் றன்றே!

[சரம் — அம்பு. செம்மல் — வீரனான ராமன். அல் — இருள். புல்லர் — அற்பர்களான மூடர்கள்.]

கல்லாத கீழ் மக்களுக்கு நல்லவர்கள் சொன்ன பொருள் போலே போய் விட்டதாம் ராமபாணமும், தாடகை நெஞ்சிலே தங்காமல். அந்த நெஞ்சை, "வயிரக் குன்றக் கல் ஒக்கும் நெஞ்சு" என்று வர்ணிக்கிறான் கவிஞன். தான் பாழாக்கிய அந்த பாலை வனத்திலே, அவள் தங்கியிருந்த அந்தப் பாழான கல் மலையைக் காட்டிலும் எவ்வளவோ கடினமாகி விட்டதாம், அந்தப் பாழ்பட்ட பாவி நெஞ்சு.

விசுவாமித்திரனுக்கு ஆபத்து வரக் கூடுமே என்று தோன்றியது தான் தாமசம்; அந்த முனிவனது 'கொல்' என்ற அந்தச் சொல்லே இப்போது இவ்வளவு வசமாகவும் உக்கிரமாகவும் தன்னை நிறைவேற்றிக் கொண்டது என்று சொல்லும்படி, முடிந்து விடுகிறது தாடகை-வதம்.



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

30. கன்னிப் போர்


தாடகையுடன் போர் செய்து கொண்டிருக்கும்போதே ராமனுடைய வீர காம்பீர்யம் மேலோங்கி ஜொலிக்கிறதாம், ஒரு பொன் நெடுங்குன்றம் போலே. அந்த வீரத்தோள், மகரிஷிகள் மகா கவிகளின் சொல்லைப் போன்ற வேகமான — கூர்மையான — சுடுசரத்தைத் தொடுத்து விட்டது தான் தாமசம்: "இதுவும் பாணம்தானா? ஏதோ ஒரு சண்டமாருதமல்லவா கிளம்பி விட்டது?" என்று பிரமிக்கும்படி வீசி யடித்துக் கொண்டே போகிறதாம் அந்த ராம பாணம்.

ராமன் வீர நெடுங்குன்று போல் விளங்க, பாணம் சூறாவளி போல் கிளம்பிப் போக, கற்களை வீசிக் கொண்டிருக்கும் அரக்கி எப்படி நிற்கிறாள், தன்னுடைய அந்தக் குன்றின் சரிவிலே? யுகாந்த காலத்திலே கல்மழை பொழியும் மேகமும் கிளம்பி விடுகிறதென்று புராணம் சொல்லுகிறது. அதே மேகம் யுக முடிவிற்கு முன்பே ஆத்திரப்பட்டு இடி இடித்துக் கல்மழை பொழியத் தொடங்கி விட்டது! — என்று திடுக்கிடும்படி இருந்ததாம் தாடகையின் தோற்றம்.

என்ன வீழ்ச்சி!

அத்தகைய அரக்கியின் வீழ்ச்சியை — அதோ நாமே பார்த்துக் கொள்ளலாம்:

பொன்னெடுங் குன்றம் அன்னான்
  புகர்முகப் பகழி என்னும்
அந்நெடுங் கால வன்காற்(று)
  அடித்தலும், இடித்து வானில்
கல்நெடு மாரி பெய்யக்
  கடையுகத்(து) எழுந்த மேகம்,
மின்னெடும் அசனி யோடும்
  வீழ்வதே போல, வீழ்ந்தாள்!



பகழ்—கூர்மையை நுனியிலே உண்
பாணம்.! அக்நெடுங் கால வன்காற்
பிரசித்தி பெற்ற பிரசண்ட மாருத
யுகாந்த காலப் பெரும் புயல். அ
—இடி.]

யுகாந்த காலத்திலே கல் ம
பொழியத் தொடக்கிய ஒரு ராட்
மேகம் அந்த யுகாந்த காலத்
சண்டமாருதம் வீச, அந்த விசைன
தாங்க முடியாமல் கீழே விழுந்
எப்படி யிருக்குமோ, அப்படி யிரு
தாம் ராமபாணத்தின் விசை தா
மல் விழுந்து விட்ட தாடகை
வீழ்ச்சியும்.

யுகாந்த கால மேகம், மின்னலோ
டும் இடியோடும் விழுவது போல் வி
தாளாம் தாடகை. தன் கோணற்
பயங்கரமாய்த் தோன்ற, அல
கொண்டே விழுந்து விட்டாள் என்ப
குறிப்பு.

அம்பு தாடகையின் மார்பை வ
ருவிப் போனதும், பெருகிய இரத்
காட்டின் அந்தப் பகுதியைத்த
எப்படிச் சிவப்பாக்கி விட்டது! "அ
மாலைத் — தோன்றிய செக்கர்வா
தொடக்கு அற்று வீழ்வது ஒத்தே
இருந்ததாம் இரத்தப் பெருக்கு.

மாலை வேளையில் மேற்கு வா
திலே யாரோ ராட்சஸ வதம் செய்
அந்த இரத்தத்தைக் கொட்டி யி
பது போலத் தோன்றுகிற தல்லவ
அந்தச் செவ்வானம், வானத்தின் ப
ப்பை விட்டு மண்ணிலே விழு
கிடப்பது போலத் தோன்றியது
தாடகையைச் சுற்றி யிருந்த இர
வெள்ளம்.


அந்தி வேளைக்குச் சற்றுமுந்தி
ந்தது தாடகை வதம் என்கிறார் வ
மீகி. அந்தக் காலக் குறிப்பு, கம்ப
நெஞ்சிலே ஊறி, தாடகை நெஞ்சி
ருந்து பெருகிய இரத்தப் பெருக்கி
எவ்வளவு பிரமாதமான — எவ்வ
பொருத்தமான — உபமானமாகி வி
டது!

தாடகையின் வீழ்ச்சிக்கு இன்னும் அதிகமான பொருத்தமுள்ள உபமானமும் காட்டுகிறான் கவிஞன். தாடகை வதத்தோடு தொடங்கிய துஷ்ட நிக்கிரகம் ராவண வதத்தோடு முடிவு பெறுவதுதானே ராமாயணம்? இந்த ராவண வதத்திற்கு ஒரு துர்நிமித்தமான முற்குறியாக — உற்பாத மாக — அவனது வெற்றிக் கொடி இற்று விழுந்தது போல விழுந்து விட் டாளாம் தாடகை.

முடியுடை அரக்கற்(கு) அந்நாள்
முந்திஉற் பாத மாகப், 9185
படியிடை இற்று வீழ்ந்த
வெற்றிஅம் பதாகை ஒத்தாள்!

[முடி — கிரீடம். அரக்கற்கு — அரக்கனுக்கு; (அதாவது) ராவண னுக்கு. உற்பாதம் — துர் நிமித்தமான முற்குறி. படியிடை — பூமி யிலே. பதாகை — கொடி. வெற்றி அம்பதாகை — அழகான வெற்றிக் கொடி.]

ராவண சக்ரவர்த்தியின் ஏகாதிபத்ய ஆட்சி, மகோன்னத நிலையில் இருக்கிறது. அந்த அரண்மனையிலே அவனுடைய ஜயக்கொடி எவ்வளவு அழகாய், எவ்வளவு பிரகாசமாய், எவ்வளவு கோலாகலமாய், நிகரற்றதாய்ப் பறந்து கொண்டிருக்கிறது! துஷ்ட ராட்சஸர்களின் வாழ்விற்கும், சாது ஜனங்களின் தாழ்விற்கும் ஓர் அறி குறியாகப் பறந்து கொண்டிருக்கும் அந்தக் கொடி கட்டி யிருக்கும் வடக் கயிற்றையும் கறையான் அரித்து விடு மென்று யார் கண்டார்? "அரித்து வருகிறது!" என்று கூடத் தெரியா மலே உள்ளுக்குள்ளே யிருந்து செல் லைப் பிடித்து விட்டதாம். கயிறு இற் றுப் போய்க் கொடி விழுந்த பின்பு தான் தெரிய வருகிறது, ராவணாதி ராட்சஸ ஸம்ஹாரத்திற்குத் தொடக் கம் ஆகிவிட்டதென்று!



தாடகை ராவணனுக்குப் பாட்டி: கொடுமை யிலும் வலிமையிலும் ஒருங்கே மூத்து முதிர்ந்தவள். இவள் வீழ்ச்சி, "அந்த ராட்சஸ சக்ரவர்த்தியின் வெற்றிகளுக் கெல்லாம் இனி வீழ்ச்சிதான், விநாச காலம் தான்!" என்று சாதுக்களின் உள்ளத்திலே நம்பிக்கை உண்டாக்கு மதாம்.

யமனும் ஓநாயும்

ராமனது முதற்போராகிய இந்தத் தாடகாயுத்தத்தைக் "கன்னிப் போர்" என்கிறான் கவிஞன்.

வாசநாள் மலரோன் அன்ன
மாமுனி பணிம றுக
காசுலாம் கனகப் பைம்பூண்
காகுத்தன், கன்னிப் போரில்,
கூசி,வாள் அரக்கர் தங்கள்
குலத்துயிர் குடிக்க அஞ்சி,
ஆசையால் உழலும் கூற்றும்
சுவைபிறி(து) அறிந்த தன்றே!

[வாசநாள் மலரோன் — வாசனையோடு இன்று மலர்ந்தது போலிரு-ும் புதிய தாமரைப் பூவில் வாழும் பிரம்ம தேவன். அன்ன — போன்ற மாமுனி — மகரிஷி. மறுக — மறக்காமல் செய்கிற. காசு — இரத்தினங்கள். உலாம் — உலாவி விளங்கும். கனகம் — பொன். பைம்பூண் — நல்ல ஆபரணம். காகுத்தன் — ராமன். கூசி — கூச்சங் கொண்டு. உழலும் — திரிந்து கொண்டிருக்கிற. கூற்று — யமன்.]

தாடகையைத் தொடர்ந்து யமன் வந்து கொண்டிருந்தானும் இது வரையிலும். பிறர் உயிரைக் குடிக்கத்தான் அவன் அப்படி இவ அருகே திரிந்து கொண்டிருந்தான் என்று நினைத்தோம். இப்போதுதா முழு உண்மையும் வெளிப்படுகிறது.

ராட்சஸர்களின் உயிரைக் குடிக்கவேணும்: அந்த ருசியைச் சுவைத்துச் சுவைத்து அனுபவிக்க வேணும்! — என்பதுதான் யமனுடைய மு நிய ஆசை. ஆனால் வாளும் கையுமாகத் திரியும் அந்தக் கொடிய அரக்கர்களை நெருங்கிப் போய் அந்த ருசியை அறிந்து கொள்வதென்றால்; ப னுக்கும் பயந்தான்! கூசிக் கூசி அஞ்சி அஞ்சிப் பின் தங்கி விட்டான் எனினும் பொல்லாத ஆசை முன்னே தள்ள, பின்னும் போய் விடாமல் முன்னும் அதிகமாய் வந்து விடாமல், உழன்று கொண்டே யிருந்தா ஆசாமி, அரக்கர்களுக்கு அருகே.

தாடகையின் இரத்தத்தைச் ருசி பார்த்ததும், ஒரே இரத்த வெ வந்து விடுகிறதாம் யமனுக்கு. இதற்கு ஒரு கதை: ஒரு பிரபுவின் ஆ பத்தைத் தாக்கி வந்ததாம் ஓநாய் ஒன்று. துப்பாக்கியைக் கண்டு, நெரு வந்து விடுவதற்கும் பயம். மனித இரத்தத்தில் உள்ள ஆசையால் ஓர காட்டுக்குள்ளே ஓடிப் போகவுமில்லை. அந்த நிலையில் அந்தப் பிரபுவி வேலைக்காரன் ஒருவன் பலியாகிறான். அந்த இரத்தச் சுவையை அறி கொண்டதும் அந்தப் பிரபு-குலத்தை லேசில் விடவா போகிறது அ ஓநாய்? அதே நிலையைத்தான் அடைந்திருக்கிறானாம் யமனும். இந் கன்னிப் போரின் பயனாக, — அந்த அரக்கர் குலத்தின் விஷயமாக.

* * *

திருமணத் தூதனாக வந்தவன்தானே விசுவாமித்திரன்? வில் முறித்துச் சீதையை மணஞ் செய்து கொள்ளப் போகும் கைத்திற ("கைவண்ணம்") எப்பேர்ப்பட்டது என்பதை இந்தக் கன்னிப் போ ஒருவாறு முன்கூட்டியே அறிவித்து விடுகிறது.